விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-8119)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 22 வெள்ளிக்கிழமை (08.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

## சஜித் ஆட்சியில் ஒருமித்த நாட்டுக்குள் ஏற்கக்கூடிய அதிகாரப் பகிர்வு கிடைக்கும்

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

(திருகோணமலை)

சஜித் பிரேமதாஸ தலைமையில் ஏற்படுத்தப்படும் ஆட்சி அனைத்து மக்களின் மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், ஒருமித்த நாட்டுக்குள் அனைவரும் ஏற்றுக்



23

எதிர்வரும் 11ஆம் திகதி

## விசேடமாக பாராளுமன்றம் கூடுகின்றது

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 23

### மக்களின் ஆணையுடன்

## புதிய அரசியலமைப்பு முன்னெடுக்கப்படும்

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

பாராளுமன்ற வரையறைக்குள் மாத்திரமல்லாது மக்கள் ஆணையுடன் புதிய அரசியலமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



சிங்கள மக்களை நிராகரித்து

## சிறுபான்மையினருக்காக அரசாங்கத்தை முன்னெடுக்க சஜித் தரப்பு முயற்சி

### சபையில் மகிந்த அணி சாடல்

(கொழும்பு)

சிங்கள பெரும்பான்மை மக்களை நிராகரித்து சிறுபான்மை மக்களுக்கான அரசாங்கத்தை முன்னெடுக்கவே சஜித் தரப்பு முயற்சிப்பதாகவும் அதற்கு இடமளிக்க முடியாதெனவும் மகிந்த ராஜபக்ஷ அணி 23

## சமஷ்டி ஆட்சி குறித்து நான் பேசியதில்லை

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

எந்தச் சந்தர்ப்பத்திலும் தான் சமஷ்டி ஆட்சி குறித்து பேசியதில்லை எனவும் சமஷ்டியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எனவும் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினர் தொடர்பான இணக்கப்பாட்டில் கையெழுத்திடும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். 23

## அமைப்பாளர் பதவியிலிருந்து சந்திரிகா நீக்கம்

சு.கட்சி அதிரடி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல்ல தொகுதி அமைப்பாளர் பதவியி 23

### ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கே ஆதரவு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(திருகோணமலை)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் 24

வங்காளவில் சூறாவளி

## கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் சூறாவளி ஏற்பட்டுள்ளதால் கடற்றொழிலுக்கு செல்ல 23

## பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவோரே புதிய பிரதமர்

### சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியாக தெரிவாகியவுடன், பாராளுமன்ற பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளும் நபரை, புதிய பிரதமராக நியமிப்பதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நாட்டு மக்களு 23

## வவுனியா பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து கேரள கஞ்சாவினை கடத்தி சென்றவரை வவுனியா பொலிஸார் நேற்று இரவு 8.45 மணியளவில் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர் 23

## இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கிறோம்

### அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

மிலேனியம் சலேஞ்ச் கோர்ப்பரேஷன் அபிவிருத்தி நிதியுதவியின் கீழ், அமெரிக்கா எந்தவொரு காணிக்கும் உரித்துடையதாகவோ அல்லது குத்தகையை கொண்டதாகவோ இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தினால் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கை 23

## கோத்தாவின் தேர்தல் மேடைக்கு கல்வீச்சு

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்தும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை குழப்புவதற்கான நடவடிக்கைகள் அட்டாளைச்சேனைப் 23

## அனைவரையும் பாதுகாக்கும் அரசாங்கத்தை அமைப்போம்

### அனுர குமார திஸாநாயக்க

(கொழும்பு)

அனைத்து சமூகங்களையும் பாதுகாக்கும் ஒரு அரசாங்கத்தை நிறுவுவதாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசா 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## INVITATION FOR BIDS (IFB)
## STILL PHOTOGRAPHY AND VIDEO FOR 34th GENERAL CONVOCATION–PART II UNIVERSITY OF JAFFNA

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the **Still Photography and Video tocover 34th General Convocation–Part II of the University of Jaffna** whichis scheduled to be held on 6th, 7th and 8th December 2019.

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five year experience in relevant field.

3. Interested bidders may obtain further information from the **Deputy Registrar/ Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and viewtheBidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs. Contact number: **021 2219201**

4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the DeputyRegistrar/ Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna until 19th November, 2019from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non- refundable fee of Rupees **two thousand (Rs.2000/-).**

5. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, P.O Box 57,Thirunelvely, Jaffna** or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branchto reach on or before 10.00 hrs on 20thNovember, 2019. Bids will be opened soon after closing at 10.00 hrs on 20thNovember, 2019at the Capital Works & Planning Branch in the presence of the bidders' representatives who choose to attend.

6. Bids shall be valid at least for a period of **60 Days** from the date fixed for receiving of Bids or any extended date.

7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;


- In the form included in the Bidding document.
- In favour of" **Competent Authority, University of Jaffna**"
- For a amount of Rs. 15,000/=
- Issued by one of the agencies acceptable to the client.

8. PreBid meeting will be held on 15thNovember, 2019 at 10.00 am in the Capital Woks & Planning Branch, University of Jaffna.

**Competent Authority,**
**University of Jaffna, Thirunelvely, Jaffna.**
**07.11.2019**

(C-8156)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




பருத்தித்துறை ஆதார
வைத்தியசாலையில் கடமையாற்றும்
**வைத்திய கலாநிதி வேலாயுதம் கமலநாதன்**
அவர்கள், ஐக்கிய இராச்சியத்தின்
கரோ மாநகரத்தின் முன்னாள் மேயரும்
தற்போதைய உறுப்பினருமான **திரு.சுரேஸ்கிருஸ்ணா** அவர்களால்,
அவர் சார்ந்த அமைப்பின் ஊடாக **"தியாக சிந்தையுடனான மருத்துவ சேவையை"** கௌரவித்து வழங்கப்படும் விருதினை தனது அகவை
காணும் இன்றைய நன்னாளில் (08.11.2019)
பெறவிருக்கிறார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்.

(C-8162)

**ஸ்ரீவிநாயகர் ஆலய பரிபாலன சபை,**
**புதுத்தோட்டம் முடக்காடு புதுத்தோட்ட அமைப்புக்களின் ஒன்றியம்.**

# 31ம் நாள்
# நினைவஞ்சலி



பிறப்பு
14 - 07 - 1951

இறப்பு
09 - 10 - 2019

அமரர்
## சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்ட ராசாவே
உன்னைப் பிரிந்து நாம் – இங்கு
உளம் வருந்தும் வேளையிலும்
மீளாத் துயர் போக்க மீண்டும் வருவாயோ எம் உயிரே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

(281)

**இல.12, கல்லூரி வீதி,**
**சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.**

இங்ஙனம்:
**குடும்பத்தினர்**

NSB

# பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 30.09.2018ற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு இன்றுவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர் வரும் 07.12.2019 தொடக்கம் 15.12.2019 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01<br>02 | முல்லைத்தீவு<br>மல்லாவி | 05/12/2019 | 07/12/2019 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 03<br>04<br>05 | கொடிகாமம்<br>சாவகச்சேரி<br>கிளிநொச்சி | 05/12/2019 | 07/12/2019 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 06<br>07<br>08<br>09 | சுன்னாகம்<br>காரைநகர்<br>சங்கானை<br>மானிப்பாய் | 05/12/2019 | 08/12/2019 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 10 | வவுனியா | 05/12/2019 | 08/12/2019 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 11<br>12<br>13 | நெல்லியடி<br>அச்சுவேலி<br>பருத்தித்துறை | 12/12/2019 | 14/12/2019 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 14<br>15 | மன்னார்<br>வங்காலை | 12/12/2019 | 14/12/2019 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 16<br>17<br><br>18<br>19<br>20 | யாழ்ப்பாணம்<br>யாழ்ப்பாணம் 2ம்கிளை<br>ஊர்காவற்றுறை<br>திருநெல்வேலி<br>கோப்பாய் | 12/12/2019 | 15/12/2019 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்தி வைக்கும் அல்லது இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**வட பிராந்திய முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி**

(899)

பெரமுனவின் தேர்தல் பிரசாரத்தில்

# துப்பாக்கிச்சூடு குறித்து கோத்தா கடும் அதிருப்தி

(கொழும்பு)

நாவலப்பிட்டியில் பொதுஜன பெரமுனவால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இந்த மோசமான சம்பவம் குறித்து ஜனா திபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வருத்தம் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கவை தேர்தல் பிரசார பகுதிக்குச் செல்ல விடாமல் தடுத்ததால் குழப்ப நிலை ஏற்பட்டது.


இதனையடுத்து அவரின் பாதுகாவலர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்ட கோத்தபாய தனது வருத்தத்தை தெரிவித்தார்.

அந்தப் பதிவில், "முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு தொடர்பில் வருத்தமடைகின்றேன். இந்தச் சம்பவம் உண்மையாக இருந்தால் இது தொடர்பில் உரிய பிரிவுகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும். சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாப்பதனை முதன்மையாகக் கருதும் எனது கொள்கையை மீண்டும் உறுதி செய்கிறேன்" என கோத்தபாய மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் குண்டுவெடிப்பு இடம்பெறும் சாத்தியம்

## எரான் எதிர்வுகூறல்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் குண்டுவெடிப்பொன்று இடம்பெறும் சாத்தியமுள்ளது என இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன எதிர்வு கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் குண்டுவெடிப்பொன்று இடம்பெறும்சாத்தியமுள்ளதாக டுவிட்டரில் தகவலொன்று தனக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பாக பொலிஸ் தலைமையகம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் அஜித் பி பெரேரா ஆகியோருக்கும் இந்த டுவிட்டர் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதனை பதிவிட்ட நபர் பாதுகாப்பு பேரவையைக் கூட்டுமாறு கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கிச்சூடு குறித்து எஸ்.பி.விரிவான விளக்கம்

(கொழும்பு)

மதுபோதையில் இருந்த இளைஞர்கள் தமது பாதுகாப்பு அதிகாரிகளின் துப்பாக்கியை பறித்து செல்ல முற்பட்டபோதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக எஸ்.பி.திஸாநாயக்க விரிவான விளக்கமளித்தார்.

நாவலப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருந்தது.நாடளாவிய ரீதியில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து நேற்று வியாழக்கிழமை)விளக்கமளித்துள்ள எஸ்.பி.திஸாநாயக்க,

"எனது பாதுகாப்பு அதிகாரிகளின் துப்பாக்கியை மதுபோதையில் இருந்த இளைஞர் குழுவொன்று பறித்துச் செல்ல முயன்றது. இதன்போது நிலத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.இதில் ஒருவர் காயமடைந்த தகவல் கிடைத்ததும் பொலிஸாரிடம் சரணடைந்து வாக்குமூலமளிக்கும்படி எனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணித்தேன். இந்தச் சம்பவம் நடந்திருக்கக்கூடாது என்பதே எனது நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

புலமைப்பரிசில் பரீட்சை - 2019



ஸ்ரீ.அஷாணி
171 புள்ளிகள்

Congratulations!



க.மிதுசன்
157 புள்ளிகள்

ஆகிய மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற க.தட்சாயினி, பு.விபூஷிதா, சு.மகிழினி, நா.மேரிசிவாணி, ஸ்.அனிற்ரன், வி.விதுனா, பு.விபூஷினி, உ.சமீரா ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களைக் கற்பித்த ஆசிரியர் திரு.செ.மதனரூபன், பாடசாலையின் அதிபர் திரு.நா.கருணாகரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
(897) யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்



பரிசில் நாளில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



2018 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற அனைத்து மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் அவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செல்வி.ச.கரன்ஷா
(4A,B, 2C,2S)

Congrats!



2019 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அவர்களை கற்பித்த வகுப்பாசிரியர் அவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செல்வி.ச.வானுஜா
(174 புள்ளி)

(900)

அனுசரணை
நிறோ லேனர்ஸ், பளை

பாடசாலைச் சமூகம்
கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை.

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-21 முஸ்லிம் கல்லூரி வீதி ஆதன இல 191,191/2 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தினை கொண்ட ஆதனம் சுல்தான் முகைதீன் முகமட் சலீம் என்னும் பெயரில் ஆதன வரிப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனம் 1976.01.03ம் திகதி பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் 351ம் இலக்கத்திலும் அதே நொத்தாரிஸ் முகதாவில் 01.02.1983ம் திகதி 1932,1933 இலக்கங்களிலும் முடிக்கப்பட்ட அறுதி உறுதியின்படியும் அவ்வுறுதிகளில் விபரிக்கப்பட்டுள்ள சொரியல் ஆதனங்களுக்கு சுல்தான் மொகைதீன் முகமட் சலீம் சொந்தமாயிருந்து அதன் பின்னர் குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த சுல்தான் முகைதீன் முகமட் சலீம் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப் பிள்ளை கௌதமன் முகதாவில் 13.10.2018ம் திகதியிடப்பட்ட 693ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மொகமட் சுல்தான் ரஹீம் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம் :- வடமாகாணம்,யாழ்ப்பாண மாவட்டம்,யாழ்ப்பாண மாநகரசபை,யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு,வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார் பண்ணை தென்மெற்கு இறை,J/87 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள "ஆனை விழுந்தான்" நில.பர.3/4 குளி 7/32 இதில் சொரியலாக நில பர 1/2(D424/151) மேற்படி "ஆனை விழுந்தான் " நில.பர.3/4 குளி 7/32 இதில் சொரியலாக 1/4 குளி 7/32 (D424/151) இவை இரண்டும் ஒன்று சேர்ந்து நில.பர.3/4 குளி 7/32 மேற்படி ஆனைவிழுந்தான் "நில.பர 3/4 குளி 7/32 (D318/176) இவை யாவும் ஒன்று சேர்ந்து நில.பர 1,1/2 குளி 14/32 இது நில அளவையாளர் S.சுப்பிரமணியம் 2015.03.13ம் திகதி அளந்து தயாரித்த 2728ம் இலக்கப்படத்தில் துண்டு 1 ஆக காட்டப்பட்ட நில.பர 1 குளி 11.10 இந்த நிலப்பரப்பு ஒன்று குளி பதினொன்று தசம் பூச்சியத்திற்குரிய எல்லை.

கிழக்கு :- முஸ்லிம் கல்லூரி
வடக்கு :- M.S முனாசின் ஆதனம்.
மேற்கு :- ஆ.மீராப்பிள்ளை ஹாஜியாரின் ஆதனம்.
தெற்கு :- A.J.M.அஸ்ரப் மற்றும் M.K யஸ்லாத்தின் ஆதனங்கள்.
இதடங்கலும் கிணறு செய் பயிர், வான்பயிர் உட்பட்ட இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது இவ்வாதனத்தை மொகமட் சுல்தான் ரஹீம் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.எனவே ஆரம்ப உறுதிகளின் பிரகாரம் இவ்வாதனம் சொரியல் ஆதனமாக காணப்படுவதால் இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் சுல்தான் ரஹீம் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை**

(C-8160)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -20. புனித மரியாள் வீதி, 17/14, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சூசை கைராசி என்னும் பெயரால் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கு 3ம் குறுக்குத் தெரு இல 50 ஐச் சேர்ந்த நீக்கிலாம்பிள்ளை கிறிஸ்தோப்பரும் மற்றும் யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கு மேரி யோசப் வீதியைச் சேர்ந்த லூக்கேஸ் மரியதாஸ்சும் பெண் மரியபுஸ்பமும் பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 21.11.2018ந் திகதியிடப்பட்ட 2174 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தினை மரியாம்பிள்ளை மேரிராணிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். எனினும் குறித்த 2174ம் இலக்க உறுதியில் தாயுறுதிகளின் விபரம் குறிப்பிடப்படாது விண்ணப்பதாரியின் காலஞ்சென்ற தந்தையாரான கிறிஸ்தோ நீக்கிலாம்பிள்ளையின் பெயரில் 1950ம் ஆண்டு காலப்பகுதியில் முடிந்த தற்போது கைவசமற்றிருக்கும் உறுதிப்படி அவரது சொந்தமானது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவ்வாதனத்திற்கு மரியாம்பிள்ளை மேரிராணி உரிமை கோருகின்றார்.

ஆதன விபரம் :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மெற்கு இறை பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் கிராமசேவையாளர் பிரிவு J/85 யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட பரப்பளவு குளி (11.64) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் யு.பிரான்சிஸ் 1990.05.25ந் திகதி அளந்து வரைந்த 790ம் இலக்கப்படத்தில் துண்டுகள் 1,2,3 எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் துண்டு-1 எனக்காட்டப்பட்ட குளி (5.31) ஐந்து தசம் மூன்று ஒன்று கிணறும் இதற்கு எல்லை.

கிழக்கு :- நீக்கிலான் தம்பித்துரையின் ஆதனம்
வடக்கு :- H.M.பாலச்சந்திரனின் ஆதனம்
மேற்கு :- பத்திநாதன் சிறினுக்கும் மறு பெயருக்குமுரிய ஆதனம்
தெற்கு :- குறித்த படத்தில் துண்டு-2 எனக்காட்டப்பட்ட பங்கும் துண்டு- 3 எனக்காட்டப்பட்ட பாதையும் இதனடாங்கலும் குறித்த படத்தில் துண்டு-3 எனக்காட்டப்பட்ட பாதையில் சென் மேரியஸ் வீதிக்குப்போக்குவரத்துச் செய்யவும் உரித்தும்.

தற்போது மரியாம்பிள்ளை மேரிராணி தனது பெயரிற்கு இவ்வாதனத்தை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு அல்லது இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மரியாம்பிள்ளை மேரிராணி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை**

(C-8162)

# இந்தியா வெற்றி

ரோகித் சர்மா மற்றும் தவானின் அதிரடியான இணைப்பாட்டம் காரணமாக பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி அபார வெற்றிபெற்று பதிலடி கொடுத்துள்ளது.

தொடரின் இரண்டாவது போட்டி நேற்று மாலை 7.00 மணிக்கு ராஜ்கோட்டில் ஆரம்பமானது.பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு களமிறங்கி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை பெற்றது.

154 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இந்திய அணிக்கு ரோகித் சர்மா அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி 6 நான்கு ஓட்டங்கள், 6 சிக்ஸர்கள்-உள்ளடங்கலாக 85 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.இந்திய அணி 15.4 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் பங்களாதேஷ் அணி நிர்ணயித்தவெற்றியிலக்கை அடைந்தது.


பழைமை வாய்ந்த
**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-8155)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி. அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -17 கஸ்தூரியார் வீதி 258ம் இலக்கம் என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் தம்பு குமாரசாமி என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற ஆதனத்தோடு தொடர்புடைய நில.பர.2 குளி 11 1/2 விஸ்தீரணமான ஆதனத்தினுடைய சொரியலான அரைவாசிப்பங்கு தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு அ.பிரேமலிங்கம் முகதாவில் 08.02.2012ம் திகதி 14ம் இலக்கத்தில் ஓர் Deed of Executric Conveyance உறுதியானது லோகேஸ்வரி இராஜராஜேஸ்வரன் என்பவரால் தனது தத்துவக்காரரான தனது கணவரான இராஜராஜேஸ்வரனூடாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பின்னர் லோகேஸ்வரி இராஜராஜேஸ்வரனால் அவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு அ.பிரேமலிங்கம் முகதாவில் 08.02.2012ம் திகதி 15ம் இலக்கத்தில் ஓர் வெளிப்படுத்தல் உறுதியும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் மேற்குறித்த அதே லோகேஸ்வரி இராஜராஜேஸ்வரன் அவரின் அற்றோனிக்தத்துவக்காரர் தனது கணவர் இராஜேஸ்வரன் மூலம் வெளிப்பட்டு மேற்குறித்த 14ம் இலக்க 15ம் இலக்க உறுதிகளின் அடிப்படையில் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற ஆதனமும் தங்களுடைய ஆதனம் என உரிமை கோரி பிரசித்த நொத்தாரிசு A.பிரேமலிங்கம் முகதாவில் இலக்கம் 48/05.06.2016 இல் வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் அதே லோகேஸ்வரி இராஜஇராஜஸ்வரன் தனது அற்றோனிக் தத்துவக்காரர் தனது கணவர் இராஜராஜேஸ்வரன் மூலம் பிரசித்த நொத்தாரிசு அ.பிரேமலிங்கம் முகதாவில் 14.11.2018ம் திகதி 120ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் திருத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மேற்படி முகவரியில் இருக்கும் லோகேஸ்வரி இராஜராஜேஸ்வரன் தனது தத்துவக்காரரான தனது கணவர் ஊடாக பிரசித்த நொத்தாரிசு A.பிறேமலிங்கம் முகதாவில் 14.11.2018ம் திகதி 121ம் இலக்கத்தில் நிறைவேற்றிய அறுதி உறுதி ஊடாக சிவகடாட்சம் பிரசாத் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

மேற்குறித்த உறுதிகளினையும் மேலதிக ஆவணங்களையும் சமர்ப்பித்து சிவகடாட்சம் பிரசாத் குறித்த ஆதனம் தன்னுடைய ஆதனம் என உரிமை கோரி யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு விண்ணப்பித்துள்ளார்.

ஆதன விபரம் :- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை இறை அடியார்க்கு நல்லான் வயல்" குளி இரண்டு தசம் இரண்டு எட்டு பூச்சியம் இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் S.நிர்மலேந்திரன் அவர்களால் 22.09.2015ம் திகதி 1364F இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

எல்லைகள்
கிழக்கு :- இராஜ ராஜேஸ்வரன் பெண் லோகேஸ்வரிக்குரிய ஆதனமும், பொது இடமும்.
வடக்கும்,தெற்கும் :- இராஜ இராஜேஸ்வரன் பெண் லோகேஸ்வரிக்குரிய மிகுதி ஆதனம்
மேற்கு :- கஸ்தூரியார் வீதி
இதடங்கலும்,

தற்போது சிவகடாட்சம் பிரசாத் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிவகடாட்சம் பிரசாத் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை**

(C-8161)

### 11 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்தில் கொல்லப்பட்டனரா?

# கன்சைட் முகாமை சல்லடை போடும் விசேட வைத்திய பகுப்பாய்வுக்குழு

**(கொழும்பு)**

**கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவத்தில், கடத்தப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த திருமலை கடற்படை முகாமின் கன்சைட் எனும் நிலத்தடி சித்திரவதை முகாம் இன்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை பூரணமாக விசேட வைத்திய பகுப்பாய்வுக் குழுவினரால் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.**

இதற்கான அனுமதியை கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க சி.ஐ.டி.எனும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று முன்தினம் வழங்கினார்.

அத்துடன் இந்தப் பகுப்பாய்வு நடவடிக்கைகளின் போது பகுப்பாய்வு வைத்திய குழுவுக்கு மேலதிகமாக அரச இரசாயன பகுப்பாய்வாளர் மற்றும் பொலிஸ் ஸ்தல பகுப்பாய்வுப் பிரிவினரும் குறித்த நடவடிக்கைகளின் போது உதவ நீதவான் அனுமதியளித்தார்.

கன்சைட் எனும் குறித்த வதை முகாமில் கடத்தப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையும், அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் அங்கு அப்போது கடமையாற்றிய லெப்டினன் கொமாண்டர் வெலகெதர, பொலித்தீன் உரைகளில் சுற்றப்பட்ட சடலங்களை கப் ரக வாகனம் ஒன்றில் ஏற்றுவதை தான் கண்டதாக சுட்டிக்காட்டி அளித்த வாக்குமூலம் மற்றும் கடத்தப்பட்டோரில் அடங்கும் ரஜீவ் நாகநாதன் தனது தாய்க்கு தொலைபேசியில் கூறிய அவ்விடத்தில் 18 வயதுக்கும் 20 வயதுக்கும் இடையிலான இளைஞர், யுவதிகள் அழைத்து வரப்பட்டு சுட்டுக்கொல்லப்படுவதான தகவல் தொடர்பிலும் அறிவியல் சான்றுகளை கண்டறியும் நோக்கில் இந்த வைத்திய பகுப்பாய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (இ-7)



## எம்.சி.சி.ஒப்பந்தத்தை எதிர்த்து போராட்டம்

(ஏறாவூர்)

மிலேனியம் சவால்கள் நிறுவனத்துடனான ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில், என். விஸ்வகாந்தன் தலைமையில் இந்தப் போராட் டம் இடம்பெற்றது.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக அமெரிக்கா வழங்கும் 480 மில்லியன் டொலர் மானியம் தொடர்பான ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இதனையடுத்து இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக பலரும் எதிர்ப்பு வெளியிட்டனர். இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக உடன்பாட்டில் கையெழுத்திடப்படாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# டெங்கு நுளம்பு பெருக ஏற்ற சூழல் காணப்பட்டால் காணி உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## வேலணை பிரதேசசபை தவிசாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட அரச மற்றும் தனியார் காணிகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற சூழல் காணப்படுமாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வேல ணைப் பிரதேசசபை தவிசாளர் நகருணாகரகுருமூர்த்தி எச்சரித்தார்.

வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட அல்லைப்பிட்டி, மண்டைதீவு, சரவணை, நயினாதீவு, வேலணை ஆகிய பகுதிகளில் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்துப்புரவு செய்யாத காணி உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (இ-10)

# புலனாய்வாளர்கள் எனக் கூறியவர்கள் கத்தியால் குத்தி பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

புலனாய்வாளர்கள் என்று அடையாளப்படுத்தி அடையாள அட்டையைப் பார்வையிட வேண்டும் எனக் கூறிவிட்டு கத்தியால் குத்திக் காயப்படுத்தி 20 ஆயிரம் ரூபாய் பணத்தை இருவர் கொள்ளையடித்துச் சென்றனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மருதனார்மடம் உரும்பிராய் வீதியில் இடம்பெற்றது. உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த செ.செல்வகுமார் வயது 50 என்பவரே இதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம்தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, டிப்பர் வாகனச் சாரதியான குறித்த நபர் வாகனத்தை இணுவில் பகுதியிலுள்ள வாகன உரிமையாளரின் வீட்டில் நிறுத்தி விட்டு உரும்பிராய் பகுதியிலுள்ள தனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாம் புலனாய்வாளர்கள் எனக் கூறி அவரின் தேசிய அடையாள அட்டையை வாங்கிப் பார்வையிட்டனர். அப்போது ஆட்டோ ஒன்று வந்த போது குறித்த நபரை போகச் சொல்லி ஷவிட்டு, அவரை பின் தொடர்ந்து சென்று, கத்தியால் குத்திக் காயப்படுத்தியதுடன், அவரிடமிருந்த 20 ஆயிரம் ரூபாய் பணத் தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-101)

## புகைப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் வாகன புகைப் பரிசோதனை கடந்த 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.இவ் வாகனப் புகைப் பரிசோதனை ஒவ்வொரு வியாழக்கிழமையும் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இடம் பெறும் என மருதங்கேணி பிரதேச செயலாளர் அறிவித்தார். (இ-5)

## பரிசளிப்பு விழா இன்று

(யழ்ப்பாணம்)

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் க. பேரின்பகுமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வட்டுக் கோட்டை உதயவாழ்வு அமைப்பின் இணைப்பாளர் திருமதி சூரியா சிவரூபன், சக்தி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் திருமதி மோகனதாசன் சோபனா, கௌரவ விருந்தினராக பழைய மாணவி திருமதி நா. பராசக்தி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## சிவதீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் சைவ சமயத்தவர்களுக்கு சிவதீட்சை வைக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

சிவதீட்சை பெற விரும்பும் சைவசமயிகள் தங்கள் பெயர்களை மேற்படி ஆலயத்தில் முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ

# நிலையான வைப்பிலிருந்து பணம் எடுக்க நிர்வாக ஒழுங்கீனமே காரணம்.

## மாநகரசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் நிலையான வைப்பிலிருந்து பணத்தை எடுப்பதற்கு நிர்வாக ஒழுங்கீனமே காரணம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் வா.பார்த்தீபன் குற்றம் சாட்டினார்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்ட தனியார் விளம்பரப் பலகைகளுக்கான கட்டணங்கள் உரிய முறையில் அறவிடப்படாமையே சபையின் நிலையான வைப்பிலிருந்து பணம் எடுப்பதற்குரிய காரணமாகும்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளான யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் 12,கஸ்தூரியார் வீதியில் 10 , நாவலர் வீதியில் 6, பிரதான வீதியில் 23, பலாலி வீதியில் 17, ஸ்ரான்லி வீதியில் 13, கே.கே.எஸ் வீதியில் 3 உட்பட 98 விளம்பரப்பலகைகள் காணப்படுகின்றன.இதில் 35 விளம்பரப் பலகைகளுக்கான ஒரு வருடத்துக்குரிய கட்டணமாக சுமார் 22 இலட்சம் ரூபாய் யாழ்.மாநகர சபைக்குச் செலுத்தப்படாமல் உள்ளது.

2018 ஆம் ஆண்டு 5 விளம்பரப்பலகைகளுக்கான கட்டணங்கள் செலுத்தப்படாத நிலையில் அதன் ஒப்பந்தகாலம் இன்று 8 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கான கட்டணமும் அறவிடப்படவில்லை.

சாதாரண வியாபார ஸ்தாபனத்திற்குரிய வரியை உரிமையாளர் கட்டத்தவறும் பட்சத்தில் எழுத்து மூலம் கட்டுமாறு பணிக்கப்பட்டு கட்டாத சந்தர்ப்பத்தில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு மாநகரசபை ஏன் இன்னும் குறித்த கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் கேள்வியெழுப்பினார். (இ-10)

# உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

## திருவோணம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

**அதிர்ஷ்ட ஜோதிடம்**

திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி-மகரம் ஆகும். மகரத்தின் அதிபதி-சனி ஆவார். அதன் சின்னம்-கடல் ஆடு ஆகும். திருவோணத்தின் அதிபதி-சந்திரன் ஆவார். அதன் சின்னம்-பெண் குரங்கு ஆகும். எனவே இவர்களிடம் மந்த புத்தியும் சோம்பறித்தனமும் நிறைந்து காணப்படும். இவர்களது மனது கடல் அலை போல் குழம்பிக்கொண்டேயிருக்கும். வஞ்சகம் இல்லாது மாடுபோல் உழைக்கக் கூடிய சுபாவமும் இவர்களிடம் இருக்கும். பெரும்பாலும் இவர்கள் பிறர் ஆதரவில் வாழ நேரிடும். கொஞ்சம் முன்கோபமும் மூர்க்கக் குணமும் திருட்டுப்புத்தியும் முட்டாள்தனமாகச் செயற்படக்கூடிய சுபாவமும் இவர்களிடம் உண்டு. முரட்டு வேலை, கூலி வேலை, அடிமைத் தொழில், இரும்பு இயந்திரம் சம்பந்தமான தொழில் செய்து காலம் தள்ள நேரிடும். நன்றியுணர்ச்சியில்லாதவர்கள். பிறர் செய்த உதவியை உடனடியாக மறந்து விடுவார்கள். அதிகாரிகளுக்குப் பயந்து ஒரு அடிமையைப்போல் வேலை செய்யக் கூடிய சுபாவமும் இவர்களிடம் உண்டு. நீதி, நேர்மை, பண்பு, ஒழுக்கம் முதலியன இவர் களிடம் குறைந்தே காணப்படும். பொறாமைக்குணம் இவர்களிடம் அதிகமாக இருக்கக் கூடும். தாய்ப் பாசம் குறைவாகவே இருக்கும். ஓரளவு தந்தைப்பாசம் உண்டு. சகோதரர் பாசம் சுமாராகவே இருக்கும். இவர்களது இல் வாழ்க்கை சற்றுப் போராட்டமாகவே இருக்கும். குழந்தைப்பாசம் சற்று அதிகமாக இருக்கக் கூடும். ஓரளவுநல்ல கல்வி ஞானம் உண்டு.

சிலர் நன்றாகப் படித்து வங்கி, கணனித்துறையில் வேலை பார்க்க நேரிடும். சிலரிடம் மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்ற தீய குணங்களும் இருக்கக்கூடும். சிலரிடம் குரங்குப் புத்தி அதிகமாக இருக்கக் கூடும். தலைவலி, சுரம், சளித் தொல்லை, நெஞ்சுவலி போன்ற நோய்களால் சிலர் அவதியுற நேரலாம். பலருக்குக்கடன்தொல்லையும் வறுமையும் மனச்சோர்வும்வர இடமுண்டு.

# இராசி பலன்

**மீனம்** — தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது.

**மேடம்** — நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்துதவுவர், பயணத்தால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீரகள்.

**இடபம்** — அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு, பேச்சைக் குறைத்து செயலில தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்** — ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சந் | இராசி பலன் | கிரகநிலை | |
| | சந்திராஷ்டமம் | மகம்,பூரம் | |
| சனி, கேது குரு. | சுக் | சூரி, புத | செவ் |

**08.11.2019**

ஐப்பசி 22, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

ஏகாதசி பிற்பகல் 1.41 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 1.56 மணிவரை

சுபநேரம் 6.05-7.35 மணிவரை

இராகுகாலம் 10.35-12.05மணிவரை

நான்காம் ஐப்பசி வெள்ளி

உத்தான ஏகாதசி விரதம்.

வளவன்

**கடகம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.

**மகரம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் இடம்பெறலாம், பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகலாம்.

**தனுசு** — மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வழியில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** — சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்ள் இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**துலாம்** — தலைமைப்பதவிகள் உங்களை நாடி வரலாம், நல்லவர்கள் ஆதரவு கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகம் உண்டு.

**கன்னி** — சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு, குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

# அறிவித்தல்
## தேர்தல் ஆணைக்குழு
## ஜனாதிபதித் தேர்தல்-2019.11.16
## வாக்களிக்கும் முறை

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்றமையால், ஒரு வேட்பாளருக்கு வாக்கு அல்லது முதலாம் விருப்பையும், ஏனைய வேட்பாளர்களில் இருவருக்கு இரண்டாம் விருப்பையும் மூன்றாம் விருப்பையும் வாக்குச் சீட்டொன்றில் அடையாளமிட முடியுமென்பதோடு, தேவையெனில் வாக்கை மாத்திரம் அடையாளமிடவும் முடியும்.

02. வாக்குச்சீட்டொன்றில், வாக்காளரொருவர் தனது இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்புக்களை அடையாளமிட்டிருக்காவிடினும், அவ்வாக்குச்சீட்டு முறையாக ஒரு வேட்பாளருக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றாக இருப்பின், அவ் வாக்குச்சீட்டு செல்லுபடியான வாக்குச்சீட்டொன்றாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆயினும், வாக்கை அடையாளமிடாமல் இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பு வாக்குகள் மாத்திரம் அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டொன்றை வாக்கு அடையாளமிடப்படாததன் காரணமாக நிராகரிக்க வேண்டியேற்படும்.

03. வாக்குச்சீட்டில் அடையாளமிடவேண்டிய முறை சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 03 ஆம் அட்டவணையில் கீழ்க்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

3.1 "1" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது வாக்கை அளிக்க முடியும்.

3.2 "2" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது இரண்டாம் விருப்பை அளிக்க முடியும்.

3.3 "3" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது மூன்றாம் விருப்பை அளிக்க முடியும்.

04. வாக்காளரொருவர் வேட்பாளரொருவருக்கு மாத்திரம் தனது வாக்கை அளிப்பதற்கு எதிர்பார்ப்பாராயின், மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டாவது அல்லது மூன்றாவது விருப்பு வாக்குகளை அடையாளமிடாமல் வாக்கினை மாத்திரம் அளிக்க முடியும். அதற்காக தான் விரும்பும் வேட்பாளரின் பெயர் மற்றும் வாக்குச் சின்னத்திற்கு வலப்புறமாகக் காணப்படும் கூட்டில் "1" அல்லது "X" என்ற அடையாளத்தை இட முடியும்.

05. எவரேனும் ஒரு வாக்காளரால் வாக்குச்சீட்டொன்றில்,

5.1 எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்கப்படவில்லையெனில், அல்லது.

5.2 ஒரு வேட்பாளரை விட அதிக எண்ணிக்கையானவர்களுக்கு வாக்கு அடையாளமிடப்பட்டிருப்பின், அல்லது

5.3 ஒரு வேட்பாளருக்கு "1" உம் மற்றுமொரு வேட்பாளருக்கு "X" உம் அடையாளமிடப்பட்டிருப்பின், அல்லது

5.4 இரண்டாம் விருப்பு அல்லது மூன்றாம் விருப்பு மாத்திரம் அடையாளமிடப்பட்டிருப்பின், அல்லது

5.5 வாக்காளரை இனங்கண்டுகொள்ளக்கூடிய விதத்தில் ஏதேனும் எழுதப்பட்டிருப்பின்,அல்லது வரையப்பட்டிருப்பின் அவ்வாறான வாக்குச்சீட்டுக்கள் செல்லுபடியற்றதாகும் என்பதுடன் அவ்வாறான வாக்குச்சீட்டுக்கள் வாக்கெண்ணும்போது நிராகரிக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
(சி-668)

## இரண்டு வீடுகள் கையளிப்பு





(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு (ஜே/62 கிராம உத்தியோகத்தர்) வளன்புரம் பகுதியில் இரண்டு வீடுகள் நேற்று முன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இதில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5-107)

## பரிசில் நாள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தின் பரிசில் நாள் இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி வ.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) சோ.திருக்குமரன்,சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர் சி.பரமநாதன், பல்கலைக் கழக ஓய்வுநிலைப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-29)

german cooperation
giz
VTA

# கட்டுமானத்துறையானது எமது பிராந்தியத்தில்



அதிக வேலை வாய்ப்பினை
ஈட்டித்தரும் ஓர் துறையாகும்.
அதில் நாமும் இணைவதன் மூலம்
வருமானத்தை அதிகரிப்பதோடு
மற்றவர்களிற்கும்
முன்மாதிரியாக திகழ்வோம்.

பயிற்சியின்போது நாளொன்றிற்கு
ரூபா 500 கொடுப்பனவாக வழங்கப்படும்.
120 நாட்கள் பயிற்சியின் பின்னர்
NVQ-3 சான்றிதழ் வழங்கப்படும்.

- கட்டட நிர்மாணவியலாளர்
- மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்)

ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

021 2227949 | 021 2211793 | 071 03188062 | 071 0318737

(சி-8148)

# கிளிநொச்சி ஏ-9 வீதியில் பாதுகாப்பற்ற மின் இணைப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பாதுகாப்பற்ற முறையில் மின் இணைப்பு காணப்படுகின்றமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி ஏ-9 வீதியின் கந்த சுவாமி ஆலயத்துக்கு அருகில் இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் மின் இணைப்பு ஒன்று காணப்படுகின்றமை தொடர்பில் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மழைகாலம் என்பதால் குறித்த பகுதியில் மின்சாரத்தால் ஆபத்து ஏற்பட சந்தர்ப்பம் உள்ளதாக தெரிவிக்கும் மக்கள், அதனை பாதுகாப்பான முறையில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஏ-9 வீதியின் மின் விளக்குகளுக்காக பொருத்தப்பட்ட குறித்த மின் இணைப்பு காணப்படும் பகுதியில் காணப்பட்ட மின் விளக்கு கம்பம் சேதமடைந்து அதனை மீள பொருத்தாமையினால் இவ்வாறு ஆபத்தான பகுதி கவனிப்பாரற்று காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (9-100)

# நானாட்டான் அச்சங்குளம் கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் கைவைத்த வனவளத்துறை

## மக்களின் எதிர்ப்பையடுத்து முயற்சி முறியடிப்பு

(மன்னார்)

**நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அச்சங்குளம் கிராமத்தில் கால் நடைகளின் மேய்ச்சல் நிலமாக ஒதுக்கப்பட்ட பகுதிகளிலும் மீன்பிடி ஓடைப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் வேலி அமைப்பதற்கு வந்த வன வளத்துறையினர் பொது மக்களின் எதிர்ப்பினை அடுத்து அந்த முயற்சியை கைவிட்டுச் சென்றுள்ளனர்.**

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் சுமார் 200 க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். கடற்றொழில் மற்றும் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டுள்ளனர்.

அந்த கிராம மக்களின் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாக அறிவிக்கப்பட்ட பகுதி மற்றும் மீன்பிடிக்காக கடலுக்கு செல்லும் ஓடைப்பகுதியினை மறித்து எட்டு அடுக்கு வலைவேலி அமைக்க வனவளத் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் மாலை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர் புவனம் மற்றும் கிராம மக்கள் எதிர்ப்பை தெரிவித்ததனைத் தொடர்ந்து வனவளத் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து சென்றுள்ளனர்.



நீண்ட காலமாக விவசாயம் மற்றும் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் நாங்கள் இங்குள்ள மேட்டு நிலத்தை கால்நடைகளின் மேய்ச்சலுக்காக பயன்படுத்தி வந்தோம்.

அருகில் உள்ள ஓடை வழியாக நண்டு, இறால் போன்றவை பிடிப்பதுடன் இந்த ஓடை வழியாகவே பெருங்கடலுக்கு சென்று மீன் பிடியில் ஈடுபட்டு வருகிறோம். வனவளத் திணைக்களத்தினர் குறித்த பகுதிகளில் எல்லை வேலிகளை போட்டு பாதையை அடைத்துவிட்டால் எமது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டு விடும்.

இது பாரம்பரியமான எமது பூமி . இங்கு வன வளப்பிரிவினர் எல்லையிட்டு நில அபகரிப்பு செய்வதை அனுமதிக்க முடியாது.

இந்த விடயத்தில் எமது முழு எதிர்ப்பினை காட்டுவோம் என்று அச்சங்குளம் கிராமத்து விவசாயிகளும் மீனவர்களும் தெரிவித்தனர். (9-285)

# முல்லையிலுள்ள சந்தைக் கட்டடங்களை இயங்க வைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவின் ஐயன்கன்குளத்திலும் கோட்டைக்கட்டியகுளம் கிராமத்திலும் அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டடங்களை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை துணுக்காய் பிரதேசசபை மேற்கொள்ள வேண்டும் என பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன.

2010ஆம் ஆண்டின் பின்னர் குறித்த சந்தைக் கட்டடங்கள் அமைக்கப்பட்ட போதிலும் இதுவரை சந்தைகள் இயங்காத நிலையில் காணப்படுகின்றன. இதில் ஐயன்கன்குளம் சந்தை இன்னமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கோட்டை கட்டிய குளம் சந்தை திறந்து வைக்கப்படவில்லை. உள்ளூர் வியாபாரிகள் சந்தைகளில் வியாபாரம் செய்வதற்கு துணுக்காய் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்படி கிராமங்களில் பேருந்து போக்குவரத்துகள் இடம் பெறாததன் காரணமாக சந்தையினை இயக்குவதிலும் தடைகள் காணப்படுவதாக பொதுமக்களினால் தெரிவிக்கப் படுகின்றது. பெருமளவு நிதியில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் கால்நடைகளின் உறைவிடமாக மாறி வருகின்றது என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (9-350)

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவருக்கு மலேரியா

(மல்லாவி)

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய நபர் ஒருவர் மலேரியா நோய்த் தாக்கத்துக்குள்ளாகிய நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குடும்பம் ஒன்று யுத்த காலத்தில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்று மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்துள்ளனார்.

இவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை விமானம் மூலம் நாடு திரும்பிய நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடும்பத்தினர் அனைவரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அப்போது 34 வயதுடைய குடும்பத்தலைவருக்கு மலேரியா நோய் தாக்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர் உடனடியாக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு மேலதிக பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் ஏ-09, வீதியில் உள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு விசேட கண்காணிப்பின் கீழ் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார். (9-15)

# ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரிய பயணம்




(மன்னார்)

படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் துண்டுப்பிரசுர விநியோக விழிப்புணர்வு நிகழ்வு கிளிநொச்சி மற்றும் மன்னார் நகர்ப்பகுதிகளில் இடம் பெற்றது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நவம்பர் 2 ஆம் திகதி, அனுஷ்டிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு குறித்த விழிப்புணர்வு நிகழ்வு ஒவ்வொரு மாவட்டங்களிலும் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் நேற்று முன்தினம் பொதுமக்களிடம் குறித்த விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.(9-100-285)



# இந்தியா சென்ற இலங்கையைச்சேர்ந்த கர்ப்பிணிகளைக் கடத்திய மர்மக்கும்பல்

## அதிரவைக்கும் பின்னணி

(சென்னை)

சென்னையில் இலங்கைப் பெண்கள் இருவரை மர்மக் கும்பல் கடத்திச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சென்னை விமான நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இலங்கையிலிருந்து பாத்திமா, திரேசா ஆகிய இரு கர்ப்பிணிகள் வந்திறங்கினர். அந்த இரு பெண்களின் நடவடிக்கையில் சுங்கத்துறையினருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அப்போது பணியிலிருந்த சுங்கத்துறை பெண் அதிகாரிகளான அம்ரூத் திரிபாதி, ரேணு குமாரி ஆகியோர், இரு இலங்கைப் பெண்களையும் சோதனையிட்டனர். அவர்களது ஆடைக்குள் எந்தவொரு பொருளும் இல்லை என்பது தெரிய வந்தது.

இருந்தாலும் அவர்களது கடவுச்சீட்டு விசா போன்றவற்றை வாங்கி வைத்துக் கொண்டு, பல்லாவரத்திலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று, இரு பெண்களின் வயிற்றையும் ஸ்கான் செய்து பார்த்தனர். அப்போது அவர்களது வயிற்றுக்குள் 1800 கிராம் தங்கம் இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து அவர்களை அழைத்துக் கொண்டு வைத்திய சாலையைவிட்டு வெளியே வந்த போது, இரண்டு கார்களில் வந்த மர்மக் கும்பல் பாத்திமா, திரேசா ஆகிய இருவரையும் கார்களில் ஏற்றி அழைத்துச்சென்றது. சுங்கத்துறை பெண் அதிகாரிகளோ தங்களை அந்தக் கும்பல் தாக்கிவிட்டு இருவரையும் கடத்திச் சென்று விட்டதாகவும், வழக்குப் பதிவு செய்யாமல் விசாரித்து இருவரையும் மீட்டுக் கொடுக்கும்படியும் பல்லாவரம் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தனர்.

உடலை ஸ்கான் செய்யும் மையம் விமான நிலையத்திற்குள்ளேயே இருக்கும் நிலையில், இரு பெண்களையும் எதற்காக வெளியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்து வந்தீர்கள் என்றும், நீங்கள் இங்கு வந்திருப்பது கடத்தல் கும்பலுக்கு எப்படி தெரியவந்தது என்றும் பொலிஸார் கேள்வி எழுப்பினர். அதற்கு சுங்கத்துறை பெண் அதிகாரிகள் உரிய பதில் கூறாமல் தடுமாறினர். இது தொடர்பாக விமான நிலையப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்குமாறு பல்லாவரம் பொலிஸார் அறிவுறுத்தினர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலையில் விமான நிலையம் சென்ற இரு பெண்களும் தங்களை கடத்திச் சென்ற கும்பல் இனிமா கொடுத்து வயிற்றில் இருந்த 1800 கிராம் தங்கத்தை எடுத்துக் கொண்டு விரட்டி விட்டதாகவும், தங்களது கடவுச் சீட்டையும் விசாவையும் தந்தால் சொந்த நாட்டிற்கு சென்று விடுவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் அவர்களிடம் நடத்திய விசாரணையில், தங்களை கடத்திச்சென்றவர்கள் யார் என்று தெரியாது என்று கூறியதால் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

தங்களை அழைத்துச் சென்று தங்கத்தை பெற விமான நிலையத்தில் காத்திருந்தவர்கள், தாங்கள் சிக்கியதைப் பார்த்து தப்பிவிட்டதாக தெரிவித்தனர். இதையடுத்து தங்கக் கடத்தல் வழக்கில் இருவரும் கைது செய்யப்பட்டனர். கடத்தல் கும்பலைப் பிடித்து தங்கத்தை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே இவர்கள் இருவரையும் கடத்திச்சென்றது எந்தக் கும்பல்? ராஜீவ் காந்தி அரசு வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட வேண்டிய இருவரையும் தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல அறிவுறுத்தியது யார்? அங்கு அழைத்துச்செல்லப்படும் தகவலை கடத்தல் கும்பலுக்கு விமான நிலையத்திலிருந்து தகவல் அளித்தது யார் ? என்ற கேள்விகளுடன் சுங்கத்துறை அதிகாரிகளான அம்ரூத் திரிபாதி, ரேணு குமாரி ஆகிய இருவரிடமும் சுங்கத்துறை உயர் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கடத்தல்களுக்கு துணையாக இருக்கின்ற சுங்கத்துறையில் உள்ள அதிகாரிகளை விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. (இ-7)

# விசேட தேவையுடையோர் சங்கத்தினர் கோத்தாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



(கொழும்பு)

விசேட தேவையுடையவர்கள் தொடர்பில் சர்வதேசம் முன்னெடுக்கும் கொள்கைத் திட்டங்கள் அனைத்தையும் முறையாகச் செயற்படுத்துவேன்.

தற்போது குறிப்பிடப்படும் வாக்குறுதிகள் ஐந்து வருட பதவிக் காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அகில இலங்கை விசேட தேவையுடையோர் சங்கத்தினருக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் அகில இலங்கை விசேட தேவையுடையோர் சங்கக் காரியாலயத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இதன்மூலம் விசேட தேவையுடைய 30 சங்கங்கள் அகில இலங்கை விசேட தேவையுடையோர் சங்கத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கோத்தபாய ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, பந்துல குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் இராமலிங்கம் குலசேகரம்

எமது பாடசாலை ஆசிரியர்களான
திருமதி நி.லோகேஸ்வரன், திருமதி க.யோகேந்திரா
ஆகியோரின் அன்புத்தந்தை அமரர்
இராமலிங்கம் குலசேகரம் அவர்களின்
மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாப த்தை தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(சி-8154)

பாடசாலைச்சமூகம், யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்


# யாழில் அருங்காட்சியக கண்காட்சி





(யாழ்ப்பாணம்)

எமது காலம் - வரலாற்றின் ஒரு நேரடி அனுபவம் எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் அருங்காட்சியக கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகிறது.

கடந்த முதலாம் திகதி வேம்படி வீதியிலுள்ள றிம்மர் மண்டபத்தில் ஆரம்பமான இக் கண்காட்சிக்கு அதிகளவான மாணவர்கள், மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இக் கண்காட்சி மூலம் கடந்த 70 ஆண்டுகால இலங்கையின் வரலாற்றை புரட்டிப்பார்க்கக் கூடியதாக இருந்ததாகவும் நாட்டின் பன்முகத்தன்மையை அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்ததாகவும் கண் காட சியை பார்வையிட்டவர்கள் தெரிவித்தனர்.

இலவசமாக நடத்தப்படுகின்ற இக் கண்காட்சி நாளை மறுதினம் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலுடன் இணைந்து புதிய பயிற்சியாளர்களுக்கும் மாணவ,மாணவியருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளது. அண்மையில் கல்விச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பலனாக மாணவ, மாணவியருக்காக இரு பெரும் முதுநிலைப் பேராசிரியர்களால் பயிற்சி நடாத்தப்படவுள்ளது. பெற்றோர்கள்,ஆசிரியர்கள் கவனத்திற்கு உங்களது செல்வங்களுக்காகவே உழைத்து ஓடாத்தேயும் நீங்கள் உடல்நலத்தோடு வாழவும் உங்களது செல்வங்கள் எதிர்காலத்தில் கல்வி, ஒழுக்கம், உடல்நலத்தில் கவனம் செலுத்தியே ஆகவேண்டியவர்களாவீர்கள். அதற்கு அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை பயிற்சிகள் தவிர வேறு ஒரு தீர்வு இனி உலகில் இல்லை. உங்களுக்காகவே இருபெரும் மனவளக்கலை பேராசிரியர்கள் தமிழகத்தில் இருந்து அழைக்கப்படுகிறார்கள். இவ்வாரத்தில் இருந்து அவர்களே பயிற்சி வழங்க இருப்பதனால் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்" என்ற வாசகத்திற்கு அமைய இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 09.11.2019 சனிக்கிழமை தொடக்கம் 15.11.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் :மனவளக்கலை பேராசிரியை ச.இந்திரா
மனவனக்கலை பேராசிரியர் சுப்பிரமணியம் (Bsc.Physics, MA. YHE)
துணைப் பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 1ம் நிலை 09.11.2019 சனி மற்றும் 10.11.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:021 222 2772.

(சி-8152)

# தமிழர் தாயகத்தில் வணக்கத்திற்காகவே பௌத்த விகாரைகள் அமைப்பு

## தமிழர் வாழும் பகுதிகளில் விகாரைகள் அமைக்கப்படவில்லை எனவும் சிவமோகன் எம்.பி தெரிவிப்பு



(குருமன்காடு)

**தென்பகுதி எங்கும் பரவலாக இந்து கோவில்கள் இருக்கின்றன. வடக்கு- கிழக்கில் வணக்கத்திற்காகவே பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு சஜித் பிரேமதாஸ காரணமல்ல என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகிறது என்பது மத ரீதியாக அரசியலுக்காக பாவிக்கப்படும் விடயம் எனத்தான் நான் பார்க்கின்றேன். வெளிப்படையாக தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் பௌத்த விகாரை பொது மக்களின் இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றதா என்றால் இல்லை என்றே சொல்லலாம். மாங்குளத்தில் ஒன்று உண்டு. அதுவும் முகாம்களின் உள்ளே தான் உள்ளது. ஏனைய இடங்களில் கட்டப்பட்ட விகாரைகள் அனைத்தும் முழுமையாக முகாம்களின் உள்ளே தான் உள்ளது. அவை வணக்கத்திற்காகவே கட்டப்பட்டது. அவை மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கட்டப்பட்டவை. அவர்கள் தங்களுடைய வணக்கத்திற்காக அவற்றை கட்டியுள்ளார்கள் என்பது உண்மை தான். அதேநேரம் இன்று அனுராதபுரத்தை எடுத்தால் எமக்கு அங்கு சைவக் கோவில் இருக்கிறது. தென் பகுதியை எடுத்தால் எங்கு போனாலும் அங்கு கோவில் இருக்கிறது.

பதுளையில் உள்ள மலை ஒன்றில் எங்களுக்கான வணக்க கோவில் இருக்கிறது. பரந்துபட்டு சைவ மக்களுக்கான கோவில்களும் கொழும்பில் இருக்கிறது. எனவே, எல்லா இடமும் எங்களுக்கான கோவில்களும் இருக்கின்றன. பௌத்த பிக்குகள் ஆன்மீகத்தை போதித்தால் பிரச்சினை இல்லை. ஆனால் இன்று அரசியலில் இறங்கியுள்ளமையால் தான் பிரச்சினை. தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளப் பிரிவு, மகாவலி அபிவிருத்தி, இராணுவம் இந்த 5 பிரிவுகளும் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் திணைக்களங்கள் என்பது உண்மை.

இங்கு இருக்கும் அதிகாரிகள் அனைவரும் சிங்களவர்களாவே இருக்கிறார்கள். நீராவியடி விவகாரம் மகிந்த ராஜபக்சவின் 52 நாள் காலத்தில் இடம்பெற்றது. சஜித் பிரேமதாஸ காரணமல்ல. என மேலும் தெரிவித்தார். (9-250)

# இ.மி.ச ஊழியர்களை தாக்கிய முக்கிய நபரை கைது செய்யக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்





(நெளுக்குளம்)

வவுனியாவில் கடந்த திங்கட் கிழமை மாலை ஆச்சிபுரம் பகுதிக்கு தொழில் நிமிர்த்தம் சென்ற மின்சார சபை ஊழியர்களை தாக்கிய சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் சிலரை கைது செய்துள்ளனர். இத்தாக்குதலுக்கு தலைமை வகித்தவராக தெரிவிக்கப்படுபவர் இன்னும் கைது செய்யப்படவில்லை. எனவே முக்கிய குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வவுனியா பூங்கா வீதியிலுள்ள மின்சார சபை அலுவலகத்தின் முன்பாக மின்சார சபை ஊழியர்களால் நேற்று ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுத்தனர். (9-299)

# பனைமட்டையால் மாணவர்களை தாக்கிய ஆசிரியை; மாணவி வைத்தியசாலையில்- பொலிஸார் விசாரணை

(மல்லாவி)

கிளிநொச்சி இத்தாவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றிவரும் ஆசிரியர் ஒருவர் பனை மட்டையால் மாணவி ஒருவரை தாக்கிய சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த மாணவி ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் தாக்குதலை மேற்கொண்ட ஆசிரியை மனநோய்க்கான சிகிச்சை பெற்று வருபவர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழுள்ள பளை கல்வி கோட்டத்திற்குட்பட்ட குறித்த பாடசாலையில் நேற்று முன் தினம் காலை பிரார்த்தனையை நிறைவு செய்து கொண்ட மாணவர்கள் தமது வகுப்பறையில் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அப்போது திடீரென வகுப்பறை ஒன்றுக்குள் நுழைந்த ஆசிரியை ஒருவர் மாணவர்கள் மீது பனை மட்டையால் மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இத்தாக்குதலை சற்றும் எதிர்பாராத மாணவர்கள் அதிர்ச்சி அடைந்ததுடன் மாணவி ஒருவர் தாக்குதல் காரணமாக மூர்ச்சையடைந்து பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வீடு திரும்பிய நிலையில் மீண்டும் மயக்கமுற்றதையடுத்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக குறித்த பாடசாலை அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த தாக்குதலை மேற் கொண்ட ஆசிரியர் கடந்த 3 மாதங்களாக தமது பாடசாலையில் கடமையாற்றுவதாகவும், இவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மனநோய்க்கான சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் இவர் இதற்கு முன்னர் இவ்வாறு நடந்து கொண்டதில்லை எனவும் இந்தச்சம்பவம் தமக்கும் அதிர்ச்சி அளிப்பதாக அதிபர் தெரிவித்ததுடன், இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி வைத்தியசாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (9-15)

வன்னி வலம்

# த.தே.கூட்டமைப்பினர் எமக்கு எதிராகவே செயற்பட்டனர்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் குற்றச்சாட்டு

(முறிகண்டி)

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள அத்தனைகட்சிகளும் எமக்கெதிரான அத்தனை விடயங்களிற்கும் மௌனமாகவே இருந்தனர். இந்த நிலையில் தமது சுகபோக மற்றும் சுயநலம் சார்ந்தே ஜனாதிபதி வேட்பாளரிற்கு அதரவு வழங்கியுள்ளனர் என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அதில் அங்கம் வகிக்கும் அத்தனை கட்சிகளும் அன்று முதல் எமக்கெதிரான விடயங்கள் அத்தனைக்கும் மௌனம் காத்தனர். 2 வருட கால அவகாசம் வழங்கியபோதும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்கியும் அவர்கள் பல துரோக செயல்களை முன்னெடுத்தனர். தாம் சொகுசு வாழ்க்கை வாழவும், தமக்கு கிடைக்கும் சலுகைகளிற்காகவும் இவர்கள் பல சந்தர்ப்பங்களில் எமக்கு எதிராக செயற்பட்டமை தொடர்பில் அவ்வப்போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

எமக்கு எதிராக செயற்படும் அத்தனை தமிழ் கட்சிகள் தொடர்பில் அவ்வப்போது எமது கண்டனங்களை வெளியிட்டுக் கொண்டே வருகின்றோம். தற்போதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமது அற்ப சலுகைகளிற்காகவும், சுக போகத்திற்காகவுமே தமது ஆதரவை ஜனாதிபதி வேட்பாளருக்கு வழங்கியுள்ளதை மேலும் தெரிவித்தார். (9-100)



**கிளிநொச்சி பளை றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலையில் 2019 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர் களை மேலும் ஊக்குவிக்கும் முகமாக பொன்மணி அறக்கட்டளை ஸ்தாபகர் குமாரசிங்கம் முத்துக்குமார் பதினைந்து மாணவர்களுக்கும் புத்தகப் பைகளை வழங்கி வைத்துள்ளார். இதற்கான ஒழுங்குகளை அக்கராயன் மகா வித்தியாலய முதல்வர் க.மதுர்நாயகம் மேற்கொண்டிருந்தார். நேற்று முன்தினம் பாடசாலையில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் இம்மாணவர்களுக்கான புத்தகப் பைகள் வழுங்கப்பட்டன.(படம்:- அக்கராயன் செய்தியாளர்)**

# வைத்தியர் இல்லாததால் 20 நாட்களாக மூடப்பட்டுள்ள புன்னை நீராவி வைத்தியசாலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பில் உள்ள புன்னைநீராவி வைத்தியசாலையில் இருபது நாட்களாக வைத்தியர் இன்றி மூடப்பட்டுள்ளதால் நோயாளிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை மத்திய பகுதியில் அமைந்துள்ள பிரமந்தன் கிராமத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் பொது வைத்தியசாலை, வைத்தியர் இன்றி பூட்டப்பட்டு செயற்பாடின்றி காணப்படுவதாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச்செயற்பாட்டினால் அங்கு சிகிச்சை பெற வரும் பலரும் பல்வேறு பசிரமங்களை எதிர் கொள்கின்றார்கள். புன்னை நீராவி , பிரமந்தன் கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழ் உள்ள பன்னிரண்டு கிராமங்களைச் சேர்ந்த பலரும் இவ் வைத்தியசாலையை நம்பி சிகிச்சை பெற வந்து நாளாந்தம் திரும்பி சென்று ஏழு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தருமபுரம் மற்றும் மூங்கிலாறு வைத்தியசாலைகளுக்கு நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள், முதியோர்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே வெகுவிரைவில் வைத்தியசாலைக்கு வைத்திய அதிகா ரியை நியமித்து உதவுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (9-315)

# போதனா வைத்தியசாலை -யாழ்ப்பாணம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல்- 2020

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2020ஆம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து பின்வரும் வளங்கல்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1000.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக்கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2020" எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2019.12.19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம்.

| உருப்படி இல | பொதுபொருட்கள் |
|---|---|
| A - 01 | அலுவலக காகிதாதிகள், எழுது பொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A - 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதி பண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTV கமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A - 06 | சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A - 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை , மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A - 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A - 09 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A - 10 | புற்பாய், தும்புத்தடி. விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A - 11 | எல்லா விதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணி துவைக்கும் தூள், பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A - 12 | டயர், டியூப், பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A - 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லா விதமான பாதணிகள். |
| A - 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A - 15 | சகல வகையானரெக்சீன் துணிகள், பொலித்தீன், பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A - 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A - 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுரெகுலேட்டர், காஸ் பனர்,காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதி, சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணைஉறை, GS Towel) |
| A - 20 | அலுவலகஅடையாள அட்டை மற்றும் பெயர் பலகை தயாரித்தல். |
| A - 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறைமற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B - 01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B - 02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B - 03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B - 04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B - 05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / x கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C - 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C - 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C - 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C - 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C - 06 | சலவை சேவைகள். |
| C - 07 | காற்றுக்குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C - 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C - 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C - 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C - 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |


| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D - 01 | சகல விதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D • 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E - 01 | கட்டிட நிர்மாணம், கட்டிட புனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E - 02 | அலுமினிய நிர்மான வேலைகள். |
| E - 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F - 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகல விதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

**நிபந்தனைகள்:**

01. வளங்கல்கள், சேவைகள் 2020 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
03. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
06. அனைத்து வளங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
07. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வளங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபர நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.



(C-8150)

**பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# சிலை சரிந்து விழுந்ததில் மதத் தலைவர் உயிரிழப்பு

## புத்தர் சிலை திரைநீக்கம் செய்யும் போது விபரீதம்



(பாங்கொக்)

தாய்லாந்தில் 16 அடி உயரமான பாரிய புத்தர் சிலையொன்றை திரைநீக்கம் செய்துவைக்க சிறப்பு விருந்தினராகச் சென்ற மதத் தலைவர் ஒருவர் அந்த சிலை சரிந்து விழுந்ததால் அதன் கீழ் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கொன்கேன் எனும் இடத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இச் சம்பவம் இடம்பெற்றது: சம்பவ தினம் கிராம மதத் தலைவரான சமன் சாந்த ஜோதி புத்தர் சிலையை வைபவ ரீதியாக திறந்து வைப்பதற்கு சென்றுள்ளார். இதன்போது அந்த சிலை அவர் மீது சரிந்து விழுந்ததால் அதன் கீழ் சிக்கி நசுங்குண்டு அவர் உயிரிழந்தார். அந்த சிலை ஸ்தாபிக்கப்பட்டிருந்த கொங்கிறீட் அடித்தளம் உறுதியற்று இருந்ததே இந்த அனர்த்தத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படு கிறது. இந்நிலையில் மேற்படி சம்பவம் குறித்து பிராந்திய பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (2)

# நெதர்லாந்து விமான நிலையத்தில் வதந்தியால் ஏற்பட்ட பதற்றம்

(அம்ஸ்ரீடம்)

நெதர்லாந்தின் அம்ஸ்ரடாமிலுள்ள சிபோல் விமானநிலையத்தில் இருந்து விமானத்தை கடத்தப் போவதாக கிடைக்கப்பபெற்ற தவறான செய்தியால் விமானநிலையத்தில் மக்கள் பதற்றமடைந்து வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு விமானத்தைக் கடத்தப்போவதாக கிடைக்கப்பெற்ற வதந்தியை அடுத்து விமான நிலையத்தில் கூடியிருந்த பயணிகள் அனைவரும் பதற்றமடைந்த நிலையில், அவர்களை அங்கிருந்து நெதர்லாந்து பொலிஸார் உடனடியாக வெளியேற்றினர்.

விமானத்திற்காக காத்திருந்த பயணிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதையடுத்து விமான நிலையம் பூட்டப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு வதந்தியால் ஏற்பட்ட பதற்ற நிலையை சீர் செய்ய விமான நிலையத்தில் இருந்து விமான சேவைகளை உடனடியாக முன்னெடுக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டதோடு குறித்த வதந்தி எவ்வாறு பரப்பப்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# ட்ரம்பின் அழைப்பின் பேரில் அமெரிக்காவுக்கு எர்டோகன்

(வோஷிங்டன்)

துருக்கி ஜனாதிபதி எர்டோகன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் அழைப்பை ஏற்று அடுத்த வாரம் அமெரிக்கா செல்லவுள்ளார்.

இதன்படி நவம்பர் 13ஆம் திகதி வெள்ளை மாளிகையில் ட்ரம்ப்பை எர்டோகன் சந்திக்கவுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் எர்டோகனுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பேசினார். இதில் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கைகள் குறித்து இருவரும் ஆலோசித்தனர்.


மேலும் துருக்கி - சிரிய எல்லையில் தற்போதைய நிலைவரம் குறித்து இரு தலைவர்களும் உரையாடினர். இந்த உரையாடலில், அமெரிக்காவுக்கு வருமாறு எர்டோகனுக்கு ட்ரம்ப் அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதாக எர்டோகன் உறுதிப்படுத்தியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. (2)

# சிறையில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட முருகன்

(வேலூர்)

வேலூர் சிறையில் 20 நாளாக உண்ணாவிரதம் இருந்து வந்த முருகன் அதிகாரிகளின் பேச்சுவார்த்தையை ஏற்று தனது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் முருகன் வேலூர் ஆண்கள் சிறையிலும், அவரது மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். முருகன் அறையில் செல்போன் சிக்கியதால் அவருக்கான சலுகைகளை சிறைத் துறை நிர்வாகம் ரத்து செய்தது.




தன்னை தனி அறையில் அடைத்துக் கொடுமைப்படுத்துவதாக கூறி முருகன் கடந்த 20 நாளாக உண்ணாவிரதம் இருந்து வந்தார்.

உண்ணாவிரதத்தை கைவிடக்கோரி முருகனிடம் சிறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

முருகன் தொடர்ந்து சாப்பிட மறுத்து வந்த நிலையில் கடந்த 20ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்தார்.

சிறை அதிகாரிகள் அவரிடம் நேற்று முன்தினம் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது சிறையில் மீண்டும் சலுகை வழங்க வேண்டும். நளினியை சந்திக்க அனுமதிக்க வேண்டும் என முருகன் கோரிக்கை விடுத்தார். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்ததை அடுத்து உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். (2)

# தங்கச் சுரங்க ஊழியர்
# 37 பேர் உயிரிழப்பு;



(ஒவ்கடங்கு)

பர்கினோ பசோ நாட்டின் தங்கச்சுரங்க ஊழியர்கள் மீது மர்மநபர்கள் நடத்திய தாக்குதலில் 37 பேர்

# தஜிகிஸ்தானுக்குள் 15 ஐ.எஸ்.பயங்கரவாதி

(துஷன்பே)

தஜிகிஸ்தான் நாட்டிற்குள் நுழைய முயன்ற ஐ.எஸ். பயங்கரவாதிகள் 15 பேரை அந்நாட்டு எல்லைப் பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர்.

உஸ்பெகிஸ்தான் எல்லையோரம் உள்ள ஒரு சோதனைச் சாவடியில் தஜிகிஸ்தான் நாட்டின் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் வழக்கம்போல பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் தஜிகிஸ்தான் எல்லைக்குள் நுழையும் நோக்கில் அங்கு பணியில் இருந்த பாதுகாப்புப் படையினர்



# ஏமனில் கிளர்ச்சியா பத்துப்பேர் பரிதாப

(சனா)

ஏமன் நாட்டின் அரச படைகளுக்கு சொந்தமான இராணுவத் தளங்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டில் அரச படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

இந்த உள்நாட்டுப் போரில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை ஈரான் ஆதரிக்கிறது.

அதே நேரத்தில் ஏமன் அரச படைகளுக்கு ஆதரவாக சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் வான்வழித் தாக்குதல்களை நடத்திவருகிறது. இதனால் அங்கு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், அந்நாட்டின் மோஷா நகரில் உள்ள அரச படைகளுக்கு சொந்தமான இராணுவத்தளங்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். (2)

# பர்கள் மீது தாக்குதல்!

# ; 60 பேர் படுகாயம்

உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்று பர்கினோ பசோ. அந்நாட்டின் போன்கியுவ் என்ற இடத்தில் கனடா நாட்டின் நிறுவனத்திற்கு சொந்தமான தங்கச்சுரங்கம் அமைந்துள்ளது.

இந்நிலையில், அந்த தங்கச்சுரங்கத்தில் வேலை செய்யும் பணியாளர்கள் நேற்று வழக்கம்போல 5 பேருந்துக்களில் தங்கள் நிறுவனத்திற்கு சென்றுகொண்டிருந்தனர். ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்துகளுக்கு உள்நாட்டு இராணுவ வீரர்கள் பாதுகாப்பளித்தனர்.

தாக்குதலில் உயிரிழந்த ஊழியர்கள் ஃபட்டா-போன்கியுவ் வீதியில் பேருந்து சென்றுகொண்டிருந்தபோது அங்கு மறைந்திருந்த மர்ம நபர்கள் சிலர் பேருந்துகளை குறி வைத்து சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் தங்கச்சுரங்க ஊழியர்கள் 37 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இந்த தாக்குதல் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)

# ஈராக்கில் தீவிரமடையும் போராட்டம் துப்பாக்கிச்சூட்டில் மூவர் உயிரிழப்பு





(பக்தாத்)

ஈராக்கில் மக்கள் போராட்டம் மேலும் தீவிரமடைந்துவரும் நிலையில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

தலைநகர் பக்தாத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை போராட்டக்காரர்கள் பாலம் ஒன்றை மறித்து போராட்டத்தை முன்னெடுத்த போது அவர்களை நோக்கிப் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தச் சம்பவத்தில் மூவர் உயிரிழந் துள்ளதோடு 17 பேர் காயமடைந்தனர். இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த போராட்டத்தில் 15 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# ட்ரம்பிற்கு எதிரான குற்றப் பிரேரணை; அடுத்த வாரம் விசாரணை ஆரம்பம்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான குற்றப்பிரேரணை மீதான விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளது.


அடுத்த வாரத்தில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்கள் அறிவித்தனர்.

வழக்கு விசாரணையின் முதலாவது அமர்வில் இராஜாங்கத் திணைக்களத்தின் 3 அதிகாரிகள் சாட்சியமளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எதிராக பகிரங்க விசாரணைகளை முன்னெடுக்குமாறு உக்ரேய்ன் அரசாங்கத்தை வலியுறுத்தியதாக தெரிவித்து ட்ரம்ப்புக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

ட்ரம்புக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபணமானால் அவர் பதவி விலக நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# ர் நுழைய முற்பட்ட ாதிகள் சுட்டுக்கொலை



மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதைச் சற்றும் எதிர்பாராத பாதுகாப்பு படையினர் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்தினர்.

இருதரப்பினருக்கும் இடையே நடந்த இந்த மோதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 15 பேர் உயிரிழந்தனர். பாதுகாப்புப்படையினர் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 5 பயங்கரவாதிகள் உயிருடன் பிடிபட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் அனைவரும் ஆப்கானிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள் என தஜிகிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. (2)

# சிரியாவில் செலவழித்ததை ஈடுசெய்வதற்கு அமெரிக்கா எண்ணெய் வளங்களை களவாடுகிறது

## ரஷ்யா குற்றச்சாட்டு

(மொஸ்கோ)

சிரியாவில் செலவிட்ட தொகையை ஈடுகட்ட அமெரிக்கா தனது இராணுவத்தளங்களை அமைத்து அங்குள்ள எண்ணெய் வளங்களை திருடுவதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

சிரியாவின் வடக்கு பகுதியில் தன்னாட்சி அரசாங்கம் நடத்தி வந்த குர்திஷ்களுக்கு வழங்கி வந்த பாதுகாப்பை அமெரிக்கா விலக்கிக்கொண்டதையடுத்து, அங்கு ரஷ்யா தனது ஆதிக்கத்தை அதிகரித்தது.

சிரியா அரசப்படைகள் மற்றும் துருக்கி படைகளுடன் இணைந்து சிரிய-துருக்கி எல்லையில் ரோந்து பணியில் ஈடுபட்டு வரும் ரஷ்யா குர்திஷ் போராளிகளை விரட்டியடிப்பதில் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.


மேலும், குர்திஷ் போராளிகள் சிரிய அரச படைகளுடன் இணைய விரும்பினால் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடுகள் செய்யவும் தயாராக இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இதற்கிடையில், தனது கட்டுப்பாட்டில் உள்ள சிரியாவின் கிழக்கு பகுதியான டேர் எஸ்ஸோர் என்ற இடத்தில் அமெரிக்கா இரண்டு இராணுவத் தளங்களை அமைத்துள்ளது.

ஆனால் இப்பகுதிகளில் எண்ணெய் வளம் மிகுதியாக உள்ளதாகவும், அவற்றை பயங்கரவாதிகள் கைப்பற்றிவிடக் கூடாது என்ற நோக்கத்திலேயே இராணுவத்தளம் அமைத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது.

இந்நிலையில், சிரியாவில் அமெரிக்கா இராணுவத்தளம் அமைத்துள்ளது குறித்து சிரேஷ்ட ரஷ்ய சட்டவல்லுநர் கோசச்சிவ் கூறுகையில், " சிரியாவில் உள்ள டேர் எஸ்ஸோர் பகுதியில் இராணுவத்தளங்களை அமைப்பது எண்ணெய் வயல்களை பயங்கரவாதிகள் கைப்பற்றிவிடக்கூடாது என்ற நோக்கத்தில் தான் என அமெரிக்கா கூறுகிறது.

இது ஒரு நேரடிக் காரணமாக இருந்தாலும், சிரியாவில் இது வரை அமெரிக்கா செலவிட்ட மொத்த செலவுத் தொகையையும் ஈடுசெய்ய எண்ணெய் வளங்களை திருடுவதற்காகவே அப்பகுதியில் தனது இராணுவத் தளங்களை அமைத்துள்ளது. அமெரிக்காவின் இந்த செயல் சட்ட விரோதமானது மட்டுமல்லாமல், சிரிய நாட்டின் இறையாண்மைக்கும் எதிரானது' இவ்வாறு அவர் தெரிவித்தார். (2)

# ளர்கள் தாக்குதல்; பமாக உயிரிழப்பு



# விண்வெளித்துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு உதவி

(சென்னை)

விண்வெளித் துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு உதவும் என தமிழக தொழிற்றுறை அமைச்சர் எம்.சி.சம்பத் கூறினார்.

இந்திய தொழில் வர்த்தக சம்மேளனத்தின் (பிக்கி) தேசிய செயற்குழுக் கூட்டம் சென்னையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடை பெற்றது. இதில் சிறப்பு விருந்தி னராக பங்கேற்ற அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், வாகன உற்பத்தியில் தமிழகம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதன் மூலம், நாட்டின் வாகன உற்பத்தியின் மையமாக தமிழகம் திகழ்கிறது. அடுத்ததாக விண்வெளித் துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு உதவும். குறிப்பாக, அத்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்கள் மற்றும் கொள்கைகள் உருவாக்கப்படும். (2)

# தேர்தல் பிரசாரத்திற்கு அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்யும் அரசாங்கம்

## தினேஷ் குற்றச்சாட்டு

(இராஜகிரிய)

**புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரசாரங்களுக்கு அரசாங்கம் அரச வளங்களை சட்டவிரோதமான முறையில் பயன்படுத்துவதாக குற்றம்சாட்டிய கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, இந்த முறைகேடுகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் அவை தொடர்கின்றன என்றும் குற்றம் சாட்டினார்.**



இராஜகிரியவிலுள்ள வியத்மக காரியாலயத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அரச நிறுவனங்கள் தேர்தல் சட்டவிதிகளை மீறாமல் செயற்பட்டாலும். அரசாங்கம் அவற்றை மீறும்வகையில் அரச சொத்துக்களை முறையற்று பயன்படுத்துவது கவலைக்குரிய விடயமாகும்.

அரசாங்கம் தேர்தல் சட்டவிதிகளை மீறும் வகையிலும் , அரச திணைக்களங்களைப் பாதிக்கும் வகையிலும் நியமனங்கள் வழங்குதல் ,நேர்முகப் பரீட்சைகளை நடத்துதல்போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அரச திணைக்களங்களில் இருப்பவர்களுக்கும் இத னால்பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அரசசேவையாளர்கள் அரச் துறையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியினரால் முன்னெடுக்கப்படும் சட்ட மீறல்கள் தொடர்பில் உடனே எமக்கு அறிவிக்கின்றனர்.நாங்களும் அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கிறோம்.

நாட்டில் இடம்பெற்ற மாபெரும் மோசடியான மத்தியவங்கி பிணைமுறி மோசடியும் இந்த அரசாங்கத்திலேயே இடம்பெற்றது. இந்த மோசடியின் போதும் அரச அதிகாரிகள் பலர் எதிர்ப்பு தெரிவித்ததுடன், அதனைக் குறிப்பு புத்தகங்க்ளிலும் பதிவு செய்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் இம்முறை பெரும்பாலான அரச ஊழியர்கள் எமது வேட்பாளர் கோத்தபாயவின் வெற்றிக்கு ஆதரவாகச் செயற்படுகிறார்கள் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அரசாங்கம் தற்போது நிர்மாணப்பணிகள்முழுமை பெறாத அதிவேக நெடுஞ்சாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும், 500 பேருக்கு நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இவை தேர்தல் சட்டவிதிகளை மீறும் செயற்பாடுகளாகும்.

ஆட்சி மாற்றம் இடம்பெறப் போகும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அரச துறையில் மேற்கொள்ளும் முறைகேடுகள் தொடர்பில் நாங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதுடன் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பொலிஸாரையும் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதேவேளை அரசியல் கட்சிகள் மறைமுகமாகவோ நேரடியாகவோ ஊடகங்களுக்கு விடுக்கும் அச்சுறுத்தல்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் உள்ளிட்ட அனைத்து வேட்பாளர்களும் ஊடகத்தின் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் செயற்பட்டால் அவர்களை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதுடன் , எதிர்ப்பும் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கிச்சூடு மேற்கொண்ட எஸ்.பியின் பாதுகாவலர்கள் கைது

(கினிகத்தேனை)

கினிகத்தேனையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கவின் மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க பயணித்த வாகனத்தை நேற்று முன்தினம் இரவு கினிகத்தேனை, பொல்பிட்டிய பகுதியில் தடுத்த கும்பல் ஒன்றைக் கலைப்பதற்காக அவரின் மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதன்போது இருவர் படுகாயமடைந்து, தெலிகம வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இருவரையும் பொலிஸார் கைது செய்தனர். (இ-7)

# போதைப்பொருட்களுடன் சிறைச்சாலை அதிகாரி கைது

(கொழும்பு)

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அருகில் வைத்து நேற்று முன்தினம் இரவு சிறைச்சாலை அதிகாரி ஒருவர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

அத்தோடு கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ஹெரோயின், கஞ்சா மற்றும் ஏனைய போதை மாத்திரைகள் அடங்கிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலஞ்சம் பெற்ற இரு பொலிஸார் கைது!

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் இரு பொலிஸார் கைது செய்யப்பட்டதாக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணையகம் தெரிவித்தது.

குறித்த இரு பொலிஸ் அதிகாரிகளும் ஒரு வழக்கைத் தீர்ப்பதற்காக நபரொருவரிடமிருந்து 10 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றதாகவும் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணையகம் மேலும் சுட்டிக்காட்டியது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இறைநேசர்

பதினொராம் நூற்றாண்டிலே ஒரு புகழ் பெற்ற இறைநேசச் செல்வர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் அப்துல்லா கிஸ் ஸவ்மயி.

இப்போது சோவியத் ரஷ்யாவிலே உள்ள ஜீலான் என்கிற நகரத்தின் புறநகர் பகுதியில் நீப் எனும் ஊர் உண்டு. அங்கேதான் அவர் இருந்தார்.

அவருக்கு ஒரு அப்பிள் தோட்டம் இருந்தது.தஜ்லா நதி ஓரத்திலே அந்த தோட்டத்திலே அவர் ஒருநாள் உலாவிக் கொண்டு இருந்தார். அந்த சமயத்திலே இருபது வயதுள்ள அழகான இளைஞர் ஒருவர் அவர் முன்னால் வந்து நின்றார்.

என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும் என்றார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. யாரப்பா நீ? நீ என்ன கெடுதல் செய்தாய்? நான் எதற்காக உன்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டார்.

ஐயா! என் பெயர் அபுஸாலிஹ்மூஸா. இங்கேயிருந்து நான்கு கல் தொலைவில் இதே தஜ்லா நதியோரத்தில் தான் நான் இருக்கிறேன். நேற்று மதியம் எனக்கு நல்ல பசி.... அந்த நேரம் ஒரு அப்பிள் பழம் நதியிலே மிதந்து வந்தது... அவசரத்திலே அதை எடுத்துச் சாப்பிட்டேன் சாப்பிட்டதற்கு பின்பு தான் அப்படி செய்தது பெரியதவறு என்பதை உணர்ந்தேன். ஒரு பொருளுக்கு உரியவர்கள் யாரோ அவர்கள் அனுமதியில்லாமல் அந்தப் பொருளை உண்பது ஹராம் ஆகும். ஹராம் ஆனா அந்தப் பழம் வயிற்றுக்குள்ளே போனதிலிருந்து எனக்கு நிம்மதியில்லை. இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. காலையில் எழுந்ததும் இந்த நதி ஓரமாக பார்த்துக் கொண்டே வந்தேன். உங்கள் தோட்டத்தைப் பார்த்தேன்.

ஒரு மரத்தினுடைய கிளை தண்ணீரைத் தொட்டுக் கொண்டு இருக்கிறதைப் பார்த்தேன். அதனாலே நான் சாப்பிட்ட பழம் இங்கே இருந்து தான் வந்திருக்க வேண்டும்.

அந்தப் பழத்துக்குரியவர் நீங்கள் தான்! நீங்கள் என்னை மன்னித்தால்தான் நான் உண்ட பழம் ஹலால் ஆகும். குற்றம் நிவர்த்தியாகும். தயவு செய்து மன்னிக்க வேண்டும் என்று கண் கலங்கிக் கேட்டார். இதைக்கேட்ட ஸவ்மயி ஆச்சரியத்துடன் அந்த இளைஞரைக் கூர்ந்து கவனித்தார். இந்த அளவுக்கு நேர்மையான ஒரு நல்ல மனிதனை விட்டுக் கொடுத்து விடக்கூடாது... என்று மனதுக்குள்ளே முடிவு செய்தார் . நிமிர்ந்து அந்த இளைஞரைப் பார்த்தார். இதற்கு நீ தண்டனையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்றார். எதுவாக இருந்தாலும் ஏற்கத்தான் வேண்டும் என்றார் அவர்.

இதற்குத் தண்டனையாக பன்னிரண்டு வருட காலம் நீ இங்கேயே பணிவிடைகளைச் செய்ய வேண்டும் என்றார்.

பணிவிடை செய்வதைப் பாக்கியமாக நினைக்கிறேன் என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியுடன் அந்தத் தண்டனையை ஏற்றுக் கொண்டார். பன்னிரண்டு வருடம் முடிந்தது.அந்தப் பன்னிரண்டு வருட காலத்திலே அவன் வயதும் தகுதியும் வளர்ந்தது. கடைசியில் அந்தப் பெரியவர் அந்த இளைஞரைக் கூப்பிட்டார்.

இதோ பாரப்பா இன்றையோட உன் பணிவிடைக் காலம் பன்னிரண்டு வருடம் முடிந்தது.ஆனால் தண்டனை இத்தோடு முடிந்து விட்டதாக நினைக்காதே. அது இன்னும் முடியவில்லை. கடைசியா இன்னும் ஒரு தண்டனை மீதியிருக்கு .... அதை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்வதற்குச் சித்தமாக இருக்கிறேன் என்றார் இவர்.

எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு இரண்டு கண்ணும் தெரியாது, இரண்டு காதும் கேட்காது, இரண்டு காலும் செயற்படாது அவளை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றார் பெரியவர். இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்றார்....ஒரு நிமிடம் திகைத்தார்.

அடுத்த நிமிடம் சரி இதையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.

இறைநேசச் செல்வர் ஸவ்மயி அவர்களின் புதல்வி பாத்திமாவுக்கும் இளைஞர் அபுஸாலிக் மூஸாவுக்கும் அடுத்த சில தினங்களிலே முறைப்படி திருமணம் நடந்தது.

திருமண்த்திற்குப் பிறகு மணமகளைப் பார்த்த இளைஞர் திகைத்துப் போனார். ஏனென்றால் அந்தப் பெரியவர் சொன்னதற்கு நேர் மாறாக இருந்தார் பாத்திமா. உடல் ஊனம் எதுவும் இல்லை. மிகவும் அழகாக இருந்தார்.

மறு நாள் ஸவ்மயி அபுஸாலிஹைக் கூப்பிட்டு இதற்கு விளக்கம் சொன்னார். என் மகளுக்குக் கண் தெரியாதென்று சொன்னேன். எந்த வித தீய காட்சிகளும் அவள் கண்ணுக்குத் தெரியாது என்று அர்த்தம். என் மகளுக்குக் காது கேட்காதென்று சொன்னேன். எந்தவித தீய விடயங்களும் அவள் கேட்கமாட்டாள் என்று அர்த்தம். கால்கள் செயற்படாது என்று சொன்னேன். வீட்டை விட்டு எந்தத் தீமையான இடங்களுக்கும் அவள் போகமாட்டாள் என்று அர்த்தம் என்றார்.

பன்னிரண்டு வருடத்திற்கு முன்னால் உன்னை முதல் முறையாகப் பார்த்தபோதே உன்னை என் சீடராக மானசீகமாக ஏற்றுக்கொண்டேன் என்ற விபரத்தைச் சொன்னார். இந்த இளைஞர் அபுஸாலிக் பிற்காலத்தில் ஒரு பெரிய ஆன்மீக மேதையாக உயர்ந்தார். அந்தத் தம்பதியர்களுக்கு 60 வயதில் ஒரேயொரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை தான் ஆன்மீகப் பேரசர் முஹ்யித்தின் அப்துல் காதர் ஜீலானி (ரலி) முஹ்யித்தின் ஆண்டகை! இறைநேசச் செல்வர்களுடைய வாழ்க்கைதான் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நாங்கள் எல்லாம் அப்படியா இருக்கின்றோம்.

எனக்கொரு சிநேகிதன்... அவன் சொன்னான்... டேய்! என்னுடைய மாமனார் கூட தன்னுடைய பெண்ணை எனக்குத் திருமணம் செய்வதற்கு முன்னால் ஒரு செய்தியைச் சொன்னார். அது பொய் என்று பின்பு தான் தெரிந்தது என்றார்.

என்ன சொன்னார்? என்று கேட்டேன்.

என் மகள் மாதத்திற்கு ஒரு தடவை ஏதாவது கோலம் வந்து கையில் கிடைப்பதை எடுத்து உங்கள் மேல் ஏறிந்தால்! நீங்கள்தான் அனுசரித்து நடக்க வேண்டும் என்றார்.

அப்படி அவர் சொன்னது பொய்யா? என்று கேட்டேன். ஆமாம் மாதம் ஒரு தடவை என்று அவர் சொன்னது பொய். தினம் ஒரு தடவை அப்படிச் செய்கிறார் என்றார்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

# கேள்வி அறிவித்தல் - 2020 (01-01-2020 - 31.12.2020)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2020 ம் திகதி முதல் 31.12.2020ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 500.00 (வரி நீங்கலாக)
கேள்விப் படிவம் விநியோகித்தல்-08.11.2019-21.11.2019 (மு.ப 9.00-பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்- 21.11.2019 பி.ப. 3.30 மணிவரை
கேள்வி திறத்தல் - 22.11.2019 மு.ப. 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 21.11.2019 ம் திகதி பி.ப 3.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

நிபந்தனைகள் :

1.சித்திபெற்றவர்கள் புரட்டாதி - மார்கழி வரையான காலப்பகுதிக்குரிய கேள்வித்தொகையின் 1/3 பகுதி குத்தகையை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். 1/3 பகுதியை செலுத்தியவர்கள் மிகுதித் தொகையை 08 சம பங்குகளாக 2020 தை முதல் ஆவணி வரை ஒவ்வொரு மாதத்திற்குமுரிய கட்டணத்தை அடுத்தமாதம் 10ம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாத குத்தகைப்பணத்தின் 10% தண்டம் மேலதிகமாக அறவிடப்படும்.

2.கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் அவரது வதிவிடத்தை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை உரியவர் நேரடியாக சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள், மாநகரசபைக்கு ஏதாவது நிலுவைக் கட்டணங்களை முன்னைய காலங்களில், அல்லது நடப்பு ஆண்டில் செலுத்த தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருந்தால், கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு கடைகள் வழங்கப்படமாட்டாது.

4.ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளை பெற கேள்விதாரர் சித்தியடைந்திருப்பின் ஒரு கடை மாத்திரமே குத்தகைக்கு வழங்கப்படும் என்பதுடன் அது எத்தகைய கடை என்பது பற்றிய இறுதி முடிவு சபையினதாகும். ஏனைய கடைகளுக்கு அடுத்த நிலையில் உள்ள கேள்விதாரரின் சித்திகரத்தன்மை அவரது கேள்வித்தொகை, அனுபவம், சபையுடனான நல்லுறவு என்பவற்றை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படலாம்.

5.சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4% இனை கட்டணமாக அறவிடலாம். குத்தகைக்காரர் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) வியாபாரி ஒருவரிடமிருந்து நாள் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூபா 100.00 அறவிடலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூபா 100.00 அறவிடலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடப்படலாகாது.

6.சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 10.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 20.00ம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடப்படலாகாது.

7.சபையின் கடைகளில் இறைச்சி/கருவாடு/கோழி ஆகியன விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகையை செலுத்துதல் வேண்டும்.

8.அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பிப்பவர்களுக்கே குத்தகை வழங்கப்படும். அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பித்தவர் குத்தகையை எடுக்கத் தவறின், அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித் தொகை திருப்திப்படக்கூடிய வகையில் அமைந்தால் பரிசீலிக்கப்படலாம் அல்லது மீள்கேள்வி கோரப்படலாம்

9.சிற்றுண்டிச்சாலைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

9.1.சிற்றுண்டிச்சாலை காலை 07.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.

9.2.சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.

9.3.மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூபா 20,000.00 உடனடியாகவே செலுத்துதல் வேண்டும். துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோருபவர் தடையறாத சேவையை வழங்க வேண்டும். இது தொடர்பான மேலதிக நிபந்தனைகள் தங்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவை கேள்விப்படிவத்துடன் தங்களுக்கு வழங்கப்படும்.

10.கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு அக்காலப்பகுதிக்குரிய **VAT, NBT** என்பன சேர்த்துச் செலுத்தப்படுதல் வேண்டும்.

11.சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர்கள் விரும்பினால் சந்தை வளாகத்தில் இடமிருக்கும் பட்சத்தில் அல்லது பிறிதொருவரின் காணியில் அனுமதியுடன் கூடாரம் இட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை தங்களது செலவில் அமைத்து நடத்தலாம். எனினும் இந்நிலையத்தில் விடப்படும் சைக்கிள்களுக்கு குத்தகையாளர்களே பொறுப்பு என்பதுடன் மேலே இல.6 இல் குறிப்பிட்ட பாதுகாப்பு கட்டணங்களையே அறவிட முடியும்.

12.இறைச்சி மற்றும் உணவுப் பொருட்கள் மாவட்ட விலை நிர்ணயக் குழுவால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனை செய்யப்படல் வேண்டும்.

13.வெள்ளிக்கிழமை, பூரணை தினங்கள் மற்றும் அரசால் அறிவிக்கப்படும் விடுமுறை தினங்களில் இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள் பூட்டப்படல் வேண்டும்.

14.கடைகள் மற்றும் சந்தைகள் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும். அதனை குத்தகைக்காரர் ஏற்றுக் கொண்டதாகக் கருதியே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

15.வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய கால்நடைகள் கொண்டுவருவது குத்தகையாளரது பொறுப்பு ஆகும். இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

16.பன்றி இறைச்சிக்கடையை குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் அதற்கென தனியான கொல்களம் ஏற்பாட்டை தாமே செய்து கொள்ள வேண்டும்.

17.சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை காரணங்காட்டாது ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணம் மாநகரசபைக்கே உரியது.

18.கொல்லப்படுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொதுமக்களின் பார்வைக்காக கால்நடைகள் மாநகர சபை கொல்களத்தில் கட்டப்பட வேண்டும்.

19.அறுக்கப்படும் விலங்குகள் உரிய அதிகாரிகளின் முன்னிலையிலேயே அறுக்கப்படல் வேண்டும்.

20.காதடையாளம்.(Ear tag) சுகாதார சான்றிதழ் மற்றும் 1958ம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் பிரகாரம் 2009.11.26 ம் திகதிய 1629/17 இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை 6 இல் பிரசுரிக்கப்பட்டவாறான விலங்கு உறுதிச்சீட்டு உள்ள மாடுகளையே கொல்களத்தில் வெட்ட வேண்டும்.

21.கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண் ஆடுகளை கிராமசேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு என கொண்டுவர முடியும்.

22.இனப்பெருக்கத்திற்குரிய நல்லின பெண் ஆடுகள் வெட்டப்படுவதை தடுப்பதற்காக அவை கொல்லப்படுவதாக இருந்தால் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்திற்கு மேலதிகமாக பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியினால் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

23.ஒவ்வொரு இறைச்சிக்கடை உரிமையாளரினது பெயரிலேயே விலங்கு உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

24.கொல்களத்தில் காலை 6.00 மணிக்குப்பின்னரே விலங்குகளை வெட்ட முடியும்.

25.கொல்களத்தில் ஆடு, மாடு வெட்டும் பணியாளர்களும் மாநகர சபையில் முன்னரே பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். பதிவு செய்யாதவர்கள் கொல்களத்தில் மாடு வெட்டும் மற்றும் ஏனைய வேலைகளில் ஈடுபட முடியாது.

26.கொல்களம் மற்றும் இறைச்சி கடைகளில் குத்தகை உரிமையாளர்களால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் சரும நோய்கள், தொற்று நோய்கள் தமக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச்சான்றிதழ் பெற வேண்டும்.

27.கொல்களம் மற்றும் இறைச்சிக்கடைகளில் புகைத்தல், மதுபான பாவனை, வெற்றிலை பாவனை என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. எவரும் தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபட்டால் கொல்களத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவர்.

28.கொல்களத்திலிருந்து இறைச்சியானது கடைகளிற்கு மூடிய பாத்திரங்களில் கொண்டு செல்லப்பட வேண்டும்.

29.கொல்களத்தில் தொழிலாளர்கள் காலுறை (Boots) மற்றும் கையுறை (gloves) அணிந்தே இறைச்சி வெட்டும் தொழிலில் ஈடுபட வேண்டும்.

30.இறைச்சி விற்பனையில் ஈடுபடுவோர் சுத்தமான ஆடைகள் மற்றும் மேலங்கி (ஏப்ரன்), தொப்பி என்பவற்றை அணிந்து விற்பனையில் ஈடுபட வேண்டும்.

31.இறைச்சிகொண்டு செல்லும்வாகனம் பொதுச்சுகாதார பரிசோதகரினால் முன்னரேயே பரிசோதிக்கப்பட்டு இறைச்சி கொண்டு செல்ல தகுதியானது என அனுமதிக்கப்பட்டால் மட்டுமே அவ்வாகனத்தில் இறைச்சி கொண்டு செல்ல முடியும்.

### இறைச்சிக்கடை குத்தகை - 2020

| தொ: இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 201,757.50 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 64,496.25 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 230,202.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 261,424.80 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 171,438.75 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 82,908.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 966,164.85 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 90,515.25 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல,09 | 5,000.00 | 966,947.63 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 979,394.85 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 158,760.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 885,087.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 537,799.50 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 101,904.08 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 347,287.50 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | ·874,337.63 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 336,372.75 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 277,664.63 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 396,900.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 352,800.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 248,172.75 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 248,062.50 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல்.08 | 5,000.00 | 220,665.38 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 245,085.75 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 382,567.50 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 65,885.40 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,725.60 |
| 28 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 79,490.25 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 589,021.65 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 618,734.03 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 447,339.38 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 474,912.90 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 524,238.75 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 584,997.53 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 450,481.50 |
| 36 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5000.00 | 73,500.00 |

### பொதுச்சந்தைக் குத்தகை - 2020

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,392,930.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,863,821.50 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 2,439,336.38 |
| 4 | நாவாந்துறை மீன் சந்தை | 10,000.00 | 604,335.38 |
| 5 | அரியாலை மீன் சந்தை | 1,000.00 | 74,231.33 |
| 6 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 356,107.50 |
| 7 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 168,847.22 |
| 8 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்திகளின் அறிமுகச் சந்தை | 2,000.00 | 8,955.05 |
| 9 | இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகனதரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 66,150.00 |
| 10 | யாழ் பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 366,404.85 |
| 11 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 264,600.00 |
| 12 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நிகழ்வு நடக்கும் நாள் ஒன்றுக்கு) | 1,000.00 | 858.19 |
| 13 | •நீதிமன்ற துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 2,000.00 | 97,497.44 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,பிராந்திய பெறுகைக்குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம்

(உ-8153)

## தீர்வு வரும் போது வடக்கு இருக்கும்

# கிழக்கு தமிழர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும்!

## வியாழேந்திரன் அச்சம்

(கறுவாக்கேணி)

**தீபாவளி, கிறிஸ்மஸ் பண்டிகைக்குத் தீர்வு வரும் என்று கூறுகின்றனர். ஆனால் தீர்வு வரும் போது வடமாகாணம் இருக்கும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் எச்சரிக்கை விடுத்தார்.**

மட்டக்களப்பு - வாழைச்சேனை, கறுவாக்கேணியில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான அலுவலகம் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.




இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களுக்கு ஜனாதிபதித் தேர்தல் ஒரு இறுதிச் சந்தர்ப்பம். தமிழர்களுடைய நிலம், வளம் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. சமய, பண்பாட்டு அம்சங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் நல்லிணக்கம் பேசிக்கொண்டு தமிழர்களுடைய இருப்பை அபகரிக்க நினைக்கின்ற சில முஸ்லிம் அரசியல் வாதிகளோடு சேர்ந்து கூத்தடிக்கின்ற நபர்களாக சில கூட்டமைப்பு உறுப்பினர்கள் கிழக்கிலே செயற்பட்டு வருவதன் விளைவால் 58.9 விகிதமாக இருந்த தமிழர்களின் இன விகிதாசாரம் 38 சதவிகிதத்திற்கு குறைந்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உபதலைவர் ஒரு முஸ்லிம் நபர். எங்களுக்கு முன் இருந்த அரசியல் தலைவர்கள் சாணக்கியமாகவும் இராஜதந்திரமாகவும் செயற்பட்டிருந்தால் நாங்கள் இன்று வீதிக்கு இறங்கிப் போராட வேண்டிய அவசியம் வந்திருக்காது.

இவர்களே தமிழ்ச் சமூகத்தினுடைய இருப்பை அழிக்கின்ற செயற்பாட்டிலே முக்கிய சூத்திரதாரியாகச் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். ஐந்து கட்சியினர் சேர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் தலைமையிலே கூடி 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

கடைசியிலே தங்களோடு இணைந்த நான்கு கட்சிகளுக்கும் தெரியாமல் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் மாத்திரம் வவுனியாவில் கூடி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக கூறியிருக்கின்றார்கள். இதைத்தான் நான் இரண்டு மாதத்திற்கு முன்னரே கூறியிருந்தேன்.

கிழக்கை மீட்கப் போகின்றோம் என்று கூறுகின்ற சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், கொள்கை பரப்பாளர்கள், முஸ்லிம் அரசியல்வாதிகள் கிழக்கை மீட்பதற்கு முன் நாம் இவர்களிடமிருந்து கிழக்கை மீட்க வேண்டும். இவர்களிடமிருந்து கிழக்கிலுள்ள எமது மக்களை மீட்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 115 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு பலவகையில் அபகரிக்கப்பட்டுள்ளது. அம்பாறையில் பெரும்பான்மையாக இருந்து தமிழர்கள் திட்டமிட்ட இன அழிப்புக்கள், குடியேற்றங்களால் 17 வீதமாக மூன்றாவது இனமாக அம்பாறையில் தள்ளப்பட்டுள்ளோம்.

திருகோணமலை நகரிலுள்ள நகர சபையை மாநகர சபையாகக் கொண்டு வருவதற்கு கூட அவரால் முடியவில்லை. அக்கரைப்பற்றில் பிரதேச சபையை ஒரே இரவில் மாநகர சபையாக முன்னாள் அமைச்சர் அதாவுல்லா மாற்றிக் காட்டினார்.

கிழக்கில் தமிழர்களின் இருப்பு கேவலமாக வந்ததற்கு காரணம், மாற்றின அரசியல்வாதிகளை விட தமிழ் அரசியல்வாதிகள் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நாங்களும் கிழக்கிலே இராஜதந்திரமாக அரசியலை செய்யாவிட்டால் அடுத்த தலைமுறை வீதியில் இறங்கிப் போராடும். மாற்று சமூகத்திடம் கையேந்தி வாழும் நிலை உருவாகும்.

தீபாவளி, கிறிஸ்மஸ்க்கு தீர்வு வரும் என்று கூறுகின்றனர். தீர்வு வரும் போது வடமாகாணம் இருக்கும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு தேசியமட்டத்தில் வெள்ளிப்பதக்கம்




(கொழும்பு)

இலங்கை வனஜீவராசிகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் இளைஞர் அணியினரால் (WNPS youth wing) பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இயற்கைப் பாதுகாப்பும் அபிவிருத்தியும் எனும் தொனிப் பொருளிலான சுவரொட்டிகள் காட்சிப்படுத்தலும் முன்வைப்புச் செய்தலும் (presentation) போட்டியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 5 மாணவிகளைக் கொண்ட அணி கடந்த 3 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (இ-5-9)

# டெங்குக்காய்ச்சலால் பாதிப்பு; 200 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

நீர்கொழும்பு வைத்தியசாலையில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 200 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களில் 40 பேர் வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆவர்.

கம்பஹா மாவட்டத்தில் அதிக டெங்கு நோயாளர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். நீர்கொழும்பு வைத்தியசாலையில் இந்த வருடத்தில் டெங்குக் காய்ச்சல் காரணமாக எட்டுப் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# யானைக்குட்டி விவகாரம் வசந்தவுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்கவை எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.



யானைக் குட்டியொன்றை வைத்திருந்தமை தொடர்பில், கொழும்புக் கோட்டை முன்னாள் நீதவான் திலின கமகேயிற்கு எதிரான வழக்கிலேயே குறித்த உத்தரவு வழங்கப்பட்து.

நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதவான் கிஹான் குலதுங்க முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கின் முறைப்பாட்டாளர் தரப்பில் முதலாவது சாட்சியாளராக, இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்கவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜராகாமை காரணமாக நீதவான் இந்த உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி இருவர் படுகொலை!

(கனேமுல்ல)

கனேமுல்ல பகுதியில் நேற்று முன்தினம் இரவு இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கனேமுல்ல - ஹொரகொல்ல பகுதியில் வைத்தே 72 மற்றும் 73 வயதான இருவரே இவ்வாறு கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்யப்பட்டனர்.

அத்தோடு இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 100 | 90 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 180 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 150 | 200 |
| தக்காளி | 80 | 150 | 120 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 120 | 100 | 80 |
| கோவா | 140 | 150 | 140 | 90 | 160 |
| கரட் | 200 | 200 | 280 | 200 | 280 |
| பூசணி | 80 | 100 | 70 | 80 | 120 |
| புடோல் | 120 | 120 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 280 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 120 | 170 | 120 |
| பாகற்காய் | 300 | 200 | 240 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 140 | 160 | 120 | 80 | 140 |
| லீக்ஸ் | 150 | 130 | 240 | 140 | 280 |
| பீற்றூட் | 90 | 100 | 140 | 70 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 240 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 140 | 150 | 140 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 70 | 120 |
| கீரை-1பிடி | 60 | 50 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 160 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 300 | – | 350 | 150 | – |
| வெங்காயப்பூ | 350 | – | – | – | – |
| முள்ளங்கி | 80 | 30 | 100 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 80 | 160 | 120 |



"சிந்தனைகள், புதுமைபுகுத்தல் மற்றும் சவால்களான மாற்றங்கள் என்பனவே எனது நிர்வாகத்தின் முக்கிய அம்சங்களாகும். சரியான தலைமைத்துவத்துடன் எமது தேசத்தின் இயலுமையை நான் நிரூபித்துள்ளேன். சிறப்பான நாளையை எதிர்காலத்தை உருவாக்க நாம் இன்று தீர்மானம் எடுப்போம்."

- கோட்டாபய ராஜபக்ஷ

தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்து பெறப்பட்டது.

ගෝඨාභය රාජපක්ෂ
கோட்டாபய ராஜபக்ஷ
Gotabaya Rajapaksa

# தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகம் மற்றும் ஒரு ஸ்மார்ட் தேசம்

21 ஆம் நூற்றாண்டானது அறிவு மையமாக உள்ளதுடன், உண்மையான போட்டித்திறன் என்பது ஒவ்வொரு பொருளாதாரத் துறையிலும் தொழில்நுட்பம் எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பதில் உள்ளது, அது விவசாயம், தொழில், சேவை அல்லது வேறு எதுவாக இருந்தாலும் சரி. இந்த நூற்றாண்டின் புதிய புதுமையான தொழில்நுட்பங்களில் நாம் மூலோபாய ரீதியாக முதலீடு செய்வது, இதுபோன்ற புதுமைகளை எங்கள் கல்வி முறைகளில் ஒருங்கிணைப்பது மற்றும் நமது பொருளாதார கட்டமைப்பில் புதுமையான நடவடிக்கைகளை இணைப்பது அவசியம். தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் கலாச்சாரத்தை உருவாக்குவதன் மூலம் எங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக உறுதியளிக்கிறோம்.



## டிஜிட்டல் உள்ளீடு கொண்ட இலங்கை

- நாடு தழுவிய அதிவேக ஆப்டிகல் டிரான்ஸ்மிஷன் சிஸ்டம் மற்றும் அதிவேக 5G மொபைல் பிராட்பேண்ட் சிஸ்டம்
- டிஜிட்டல் கண்காணிப்பு மற்றும் நிர்வாக மையங்களைக் கொண்ட ஸ்மார்ட் நகரங்கள்
- அனைத்து நிதி பரிவர்த்தனைகளுக்கும் மொபைல் மற்றும் டிஜிட்டல் கட்டண தளம்
- சர்வதேச வர்த்தகத்திற்கான எல்லை தாண்டிய மின் வணிகம் மற்றும் சர்வதேச மின்-கட்டண முறை
- புதிய சைபர் பாதுகாப்பு, தரவு பாதுகாப்பு மற்றும் அறிவுசார் சொத்து சட்டம்
- ஆலோசனை சேவைகள் மூலம் இலங்கைக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் அனைவருக்கும் வருமான வரி விலக்கு
- இணைய வசதிகள், சிறப்பு மென்பொருள் மற்றும் தொழில்நுட்ப சேவைகளைப் பயன்படுத்துவதற்கான எளிய வரி அமைப்பு
- தொலைபேசி மற்றும் இணையத்தில் விதிக்கப்படும் சேவை கட்டணங்களில் 50% குறைப்பு
- தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான பூஜ்ஜிய வரி

## ஒரு தகவல் தொழில்நுட்ப தொழில்படையணியை உருவாக்கல்



- புதுமை மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலை அடிப்படையாகக் கொண்ட புதிய டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கல்வி முறை
- பல்கலைக்கழகங்கள் ஸ்மார்ட் கற்றல் பல்கலைக்கழகங்களாக மாற்றப்படும்
- மேலும் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கும் நோக்கில் தொழில்நுட்ப பீடங்கள் தொடங்கப்படும்
- உயர்கல்வியை தொடர வட்டியற்ற ரூ. 01 மில்லியன் கடன் வசதி
- நிபுணத்துவ தொழில்முறை கற்கைளுக்கு வேலைவாய்ப்பின் பின்னர் திருப்பிச் செலுத்தும் விதமான நிதி வசதிகள்
- ஸ்மார்ட் போன்கள், டேப்லெட்டுகள், மடிக்கணினிகள் அல்லது டெஸ்க்டாப்புகளை வாங்க இளைஞர்களுக்கு இலகு கொடுப்பனவு திட்டங்கள்
- தொழில்புரியும் மக்களுக்கான ஆன்லைன் கல்வி, வார இறுதி கல்வி மற்றும் திறந்த கற்றல் திட்டங்கள்

# உலகளாவிய கண்டுபிடிப்பு மையம்



இன்டர்நெட் ஆ.்.ப் திங்ஸ் (IoT), செயற்கை நுண்ணறிவு (AI), பயோடெக்னாலஜி, ரோபாட்டிக்ஸ், ஆக்மென்ட் ரியாலிட்டி, கிளவுட் கம்ப்யூட்டிங், நானோ டெக்னாலஜி மற்றும் 3D பிரிண்டிங் போன்ற புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகரிக்க இலங்கையை உலகளாவிய கண்டுபிடிப்பு மையமாக நிறுவுவோம்.

## தகவல் தொழில்நுட்ப தொழில்முனைவு



- சர்வதேச சந்தைக்கான மென்பொருளை உருவாக்க உள்ளூர் தொழில்முனைவோருக்கு அதிகபட்ச ஆதரவு
- முக்கிய நகரங்களில் தகவல் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் BPO மையங்கள்.
- உள்ளூர் தொழில்களுக்கான மென்பொருளை உருவாக்க உள்ளூர் மென்பொருள் பொறியிலாளர்களை வலுப்படுத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்தல்.
- 2025 க்குள் 300,000 மென்பொருள் பொறியிலாளர்கள் மற்றும் புரோகிராமர்களை உருவாக்கல்.
- 2025 ஆம் ஆண்டில் 3 பில்லியன் அமெரிக்க டாலர்களை பெற்றுக் கொள்ளும் விதத்தில் BPO மற்றும் KPO தொழில்துறைகள் உருவாக்கப்பட உள்ளன.


## மக்களை மையப்படுத்திய டிஜிட்டல் அரசாங்கம்

- தேசிய ஆள்அடையாளஅட்டை, கடவுச்சீட்டு, பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்கள், சாரதி அனுமதி உரிமம் மற்றும் நில தலைப்பு பத்திரங்களுக்கான இணையம் ஊடாக அமைப்புகள் ஆகிய முக்கிய 9 குடிமக்கள் சேவை மையங்கள் மூலம் சேவைகளைப் பெறுவது எளிதாக்கல்.
- இலஞ்சம் மற்றும் ஊழலை அகற்ற ஒரு புதிய மின்-கொள்முதல் முறை.
- தரவு சேகரிப்பு மற்றும் ஆரம்ப எச்சரிக்கை மற்றும் பதில் அமைப்புகள் மூலம் சிறந்த பேரழிவு மேலாண்மை.
- நோயாளியின் வசதிக்காகவும், நெரிசலைக் குறைப்பதற்காகவும் ஈ-ஹெல்த் மற்றும் டெலிமெடிசின் உள்ளிட்ட நவீன சுகாதார சேவைகள்



- மனநலத்தின் தரத்தை நிவர்த்தி செய்ய 24 மணிநேர கட்டணமில்லா ஆன்லைன் உளவியல் ஆலோசனை சேவை.
- போதைப்பொருள் அச்சுறுத்தலை எதிர்ப்பதற்கான நவீன தொழில்நுட்பம்.
- மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில்நுட்ப அடிப்படையிலான ஆதரவு அமைப்புகள்.
- அனைத்து பொது மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளுக்கான ஒற்றை போக்குவரத்து மின்-டிக்கெட் அமைப்பு மற்றும் மின்-டிக்கெட் பொறிமுறை.
- போக்குவரத்து அபராதங்களுக்கான டிஜிட்டல் மற்றும் மின்னணு கட்டண முறை.

## விவசாய - தொழில்நுட்பம்



- பிராந்திய அளவிலான கூட்டுறவு பண்ணை உற்பத்தி முறையின் மூலம் அதிகபட்ச ஆதாயங்களுக்கு பெரிய அளவிலான விவசாயத்தை ஊக்குவித்தல்.
- தேவையான தொழில், தொழில்நுட்பங்கள், கடன் வசதிகள் மற்றும் வரி சலுகைகள் ஆகியவற்றைக் கொண்டு பத்து ஆண்டுகளுக்குள் விவசாய தொழில்முனைவோரின் இளமை வகுப்பை உருவாக்குங்கள்.
- அதிக மகசூல் மற்றும் செலவு மேம்படுத்தலுக்காக விவசாயத்தில் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது.



(C-108)

# கோத்தாவுக்கு ஆதரவு வழங்குவதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்; இல்லையேல் இ.தொ.கா.காணாமல் போய்விடும்

## தொண்டமானுக்கு வேலுகுமார் இடித்துரைப்பு



(கண்டி)

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவது என்ற தீர்மானத்தை ஆறுமுகன் தொண்டமான் மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.இல்லையேல், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காணாமல் போய்விடும் என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு திரட்டி கண்டி மாவட்டத்தில் பல இடங்களிலும் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுத்துவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இம்முறை பட்டப்பகலிலேயே படுகுழிக்குள் விழும் வகையில் அரசியல் தீர்மானம் எடுத்துள்ளது.

இதே வழியில் ஆறுமுகன் தொண்டமான் பயணிப்பாராயின் இன்னும் சில வருடங்களில் காங்கிரஸ் காணாமல்போய் விடும்.

தமிழ் மக்களால் துரோகிகளாகப் பார்க்கப்படுகின்ற கருணா, பிள்ளையான் போன்றோர் அங்கம் வகிக்கும் அணியில் ஆறுமுகன் தொண்டமானும் இணைந்துள்ளதால் அவரின் கட்சி சகாக்களே கடும் அதிருப்தியில் உள்ளனர்.

எனவே, ஜனாதிபதித் தேர்தல் குறித்து தான் எடுத்துள்ள முடிவை - சமூகத்தின் நலன்கருதி அவர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

மகாத்மா காந்தி, நேரு போன்ற பாரத தேசத்தின் தலைவர்களின் பங்களிப்புடனேயே மலையக மக்களுக்காக 1939 ஆம் ஆண்டில் இலங்கை, இந்திய காங்கிரஸ் உதயமானது.

எனவே, எங்கள் தாத்தா அதை செய்தார், இதை செய்தார் எனக் கூறிக்கொண்டு, மக்கள் கோரிக்கையைப் புறந்தள்ளி, இனியும் சந்தர்ப்பவாத அரசியலை ஆறுமுகன் தொண்டமான் முன்னெடுப்பாரானால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயம் காணாமல்போய்விடும்.

சிறப்பர்ன தலைமைத்துவம் இன்மையால் சுதந்திரக்கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமையை சிறந்த படிப்பினையாக அக்கட்சிக்காரர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வழமையாக தவறான அரசியல் முடிவுகளால் இரவில் வெட்டப்படும் குழிக்குள் விழும் ஆறுமுகன் தொண்டமான், இம்முறை பட்டப்பகலிலேயே குழிக்குள் விழுந்துள்ளார். அந்தக் குழிக்குள் இருந்து மீள வேண்டுமானால் தான் எடுத்துள்ள முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# நாட்டில் ஊடக அடக்குமுறைக் கலாசாரத்தை மீளக்கொண்டு வரவே ராஜபக்ஷக்கள் முயற்சி

## ஹர்சன குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட ஊடக அடக்குமுறைக் கலாசாரத்தை மீண்டும் கொண்டுவருவதற்கே ராஜபக்ஷக்கள் முயற்சிக்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நடத்தப்பட்ட அனைத்து கருத்துக்கணிப்புக்களிலும் தமது வேட்பாளர் சஜித் பிரேமதாஸவே முன்னிலை வகிக்கின்றார்.

தமது தோல்வியை அறிந்து கொண்ட எதிரணியினர் தற்போது ஊடகங்களை அச்சுறுத்தவும் அவற்றுக்கு அழுத்தங்களை வழங்கவும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இவற்றிலிருந்து மகிந்த ராஜபக்ஷ குடும்பம் கடந்த காலத்திலிருந்து எவ்வித பாடமும் கற்றுக் கொள்ளவில்லை என்பதையும், அவர்கள் சிறிதும் மாறவில்லை என்பதையுமே உணரமுடிகிறது எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1882

Search for people, places and things

### தர்சி




### கலைவாணி




### சிலம்பு




### கபில்




### வர்ஷா




### பாரதி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள்




அதிபர்
திரு.ம.யோகேஸ்வரன்

பிரதி அதிபர்
திருமதி.இ.கதிர்காமநாவலர்

ஆசிரியர்
திரு.ப.சுதர்சன்

ஆசிரியர்
திருமதி.மே.கோபாலகிருஸ்ணன்



ர.அபினயன் புள்ளி : 193 மா.வ.நி.01
கோ.கோபிதன் புள்ளி : 183
ஸ்.ரிதுசன் புள்ளி : 182
சி.மிதுலன் புள்ளி : 182
வ.அபிசா புள்ளி : 180
இ.நிரோஜன் புள்ளி : 172
ஜெ.அபிசன் புள்ளி : 172




சு.சயன் புள்ளி : 170
நே.கவின்ஜா புள்ளி : 170
ஜெ.கம்சிகா புள்ளி : 169
கு.கனுசிகன் புள்ளி : 167
தி.ரிசிகேசன் புள்ளி : 166
கி.பிரதீசா புள்ளி : 166
யோ.நிவேதினி புள்ளி : 166



சு.சரணியா புள்ளி : 165
ச.சாணக்யன் புள்ளி : 165
வி.அபினேஸ் புள்ளி : 165
சு.மயூரிகா புள்ளி : 164
கி.நிஷான் புள்ளி : 164
ம.மதுமிலன் புள்ளி : 164
ம.சாருஜன் புள்ளி : 162



செ.கயல்நிலா புள்ளி : 162
வி.திவிப்பிரியா புள்ளி : 162
த.கிசானி புள்ளி : 161
தி.சிலோஜன் புள்ளி : 161
சு.மிதுலன் புள்ளி : 160
மு.பவித்திரா புள்ளி : 160
நே.பதுர்சிகா புள்ளி : 160



செ.பவிதா புள்ளி : 159
கோ.அஜய் புள்ளி : 159
கு.பிருத்திகா புள்ளி : 159
வி.நிருபன் புள்ளி : 158
கோ.யக்சினி புள்ளி : 157
ம.யதுர்சன் புள்ளி : 157
க.தனுசியா புள்ளி : 157



க.சாரங்கா புள்ளி : 155
யோ.லோஜிதன் புள்ளி : 155
ஜெ.தரணிகா புள்ளி : 155
தி.தருநிகன் புள்ளி : 152

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் :**

பி.றினோஜினி - 148, கு.தீபிகா - 148, வி.ஜிலுக்சிகா - 146, தி.ஜெனிதா - 145, ல.நிவேதிகா - 142, கோ.கிசோபிகா - 142, பூ.லவன்யா - 138, கி.சதிஸ்குமார் - 134, ற.காருஜன் - 132, மு.விமல்ராஜ் - 132, சு.தனோஜன் - 132, ம.திசாங்கி - 131, த.லதுசாந் - 129, கி.ஜெசிந்தன் - 127, த.நிலானி - 119, மா.நிரேஜன் - 118, செ.கனிமொழி - 118, நி.கிருசாந் - 115, அ.மோகனா - 113,

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் :**

இ.றொசாளினி - 90, க.யதுர்சன் - 87, ர.றதீசா - 74, ச.துளசிகா - 72, க.கயளவன் - 71

வாழ்த்துவோர் - பெற்றோர்கள் (தரம் - 5)
மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

(C-8151)





வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வலிகாமத்தின் வர்ணம்-2019 ஓவியக்கண்காட்சி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்று வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்றது.





நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் அதிபர் க.புஸ்பராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ்.அன்ரன், பதுளை போதனா வைத்தியசாலை புற்று நோயியல் வைத்திய நிபுணர் ம.செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.






கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.




உங்கள்
கல்யாண
மாலை

பல நூற்றுக்கு மேற்பட்ட
திருமணங்களை பொருத்திய சாதனை

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1000/-
சேவைக் கட்டணம் ரூபாய் 300 /-

தொடர்பு - கல்யாணமாலை இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005, 021 221 5434
Email : Kalyanamalai.jaffna@gmail.com



Registered as a Newspaper in Srilanka

உங்கள் வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk Viber : 076 636 3378
E-mail : valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
T.P : 021 221 7603 Fax : 021 222 7829

20ஆவது ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேவையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

மரண அறிவித்தல்
கண்ணீர் அஞ்சலி
நினைவஞ்சலி

ஆகிய விளம்பரங்கள் வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள வலம்புரி 20ஆவது ஆண்டு நிறைவில் இன்னும் புதுப் பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

செய்த வினையும், செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா!

– கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## டெங்கு நோயை கட்டுப்படுத்த ஒன்றாகக் களம் இறங்குவோம்

முன்னெப்போதும் இல்லாதவாறு யாழ். குடாநாட்டில் டெங்கு நோய் பரவி வருகிறது.

இதேபோக்கில் டெங்குத் தொற்று பரவுமாக இருந்தால் கட்டுக்கடங்காமல் போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆம், எங்கு பார்த்தாலும் டெங்கு காய்ச்சல் என்பதே பேச்சாக இருக்கிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எல்லை கடந்து போயிற்று.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை டெங்குத் தொற்றானது திருப்திப்படுமளவில் கட்டுப்பாட்டில் இருந்தது.

சுகாதாரப் பணியாளர்களின் கடுமையான பங்களிப்புகளும் டெங்கு ஒழிப்பு வாரம் – மாதம் என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளும் பாடசாலை மாணவர்களின் ஒத்துழைப்புமாக டெங்குத் தொற்று கட்டுப்பாட்டில் இருந்தது.

ஆனால் மழை காலம் ஆரம்பித்து விட்ட பின்பு டெங்குத் தொற்று யாழ்.குடாநாடு முழுவதையும் உலுக்கி வருகிறது.

இங்கு நாம் ஒரு விடயத்தை மிகக் கவனமாக ஆராய வேண்டும். அதாவது டெங்குத் தொற்றைப் பரப்புகின்ற குடம்பிகள் பெருகக் கூடிய இடங்களை இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டம் விதிப்பதில் சுகாதாரப் பகுதியினர் காட்டிய ஆர்வம் டெங்குக் கட்டுப்பாட்டை மறைகணியத்துக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது டெங்குத் தொற்றைப் பரப்பும் குடம்பிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில்; சம்பந்தப்பட்டவர்களின் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி, டெங்கு நோயின் பாதிப்பை உணர வைத்து இனிமேல் என்னால் – எம்மால் டெங்கு பரவுகின்ற சூழமைவு ஏற்படமாட்டாது என நினைக்கின்ற வகையில் மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து ஏதோ அரசாங்கத்துக்குப் பணம் அறவீடு செய்து கொடுக்கின்ற அமைப்புப் போல யாழ்.குடாநாட்டில் உள்ள சுகாதாரப் பிரிவுகளும் பொதுசுகாதார உத்தியோகத்தர்களும் நடந்து கொள்ள, வீட்டுக் குப்பைகள் வீதிக்கு வந்து விட்டன.

வீதியில் கொட்டப்படும் குப்பை கூழங்களை முறையாக அகற்றாத நிலையில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் வேகமாகிவிட்டது.

தவிர, கவனிப்பாரற்ற காணிகள், பூட்டிக் கிடக்கும் வீடுகள், வீதிகளில் காணப்படும் சிறு குன்று குழிகள் என எல்லாமும் சேர்ந்து டெங்கு நோய் பரவலை காட்டாறுபோல ஆக்கியுள்ளது.

எனவே டெங்கின் ஆபத்தை உணர்ந்து நாம் அனைவரும் ஒன்றுபட்டு டெங்கு பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தை தடுக்க சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க உறுதிபூணுவோமாக.

இங்கு தண்டம் அறவிடுதல் என்ற நடைமுறையை ஒத்திவைத்துவிட்டு, முதலில் மக்களை மனச்சாட்சிப்படி நடப்பதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

இதனைச் செய்யும்போது டெங்குத் தொற்று கணிசமாகக் குறைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும்.

## பச்சிலைப்பள்ளி, புதுக்குடியிருப்பில் அதிக கடன்களை வழங்கிய ‘இலங்கை வங்கியின் துறுணு திரிய’ கடன் திட்டம்

இலங்கை வங்கியின் "துறுணு திரிய" கடன் திட்டத்தின் கீழ் இதுவரை 1040 வரையான இளம் தொழில் முனைவோர்க்கு 42 கோடியே 32 இலட்சத்து 29 ஆயிரத்து 628 ரூபாய்பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை வங்கியினால் வெளியிடப்பட்ட "துறுணு திரிய" கடன் திட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்பான வாராந்த முன்னேற்ற மீளாய்வு அறிக்கையிலேயே இத்தரவுகள் வெளியிடப்பட்டன.

"துறுணு திரிய" கடன் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் கடன்கள் வழங்கப்பட்டதோடு, வடக்கு மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் 15 கடன்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் 16 கடன்களையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் கடன் பெற்றவர்கள் தையல், கலையகம் (Studio), மேசன், அலுமினியம் பொருத்தல் , ஆலை, ஒப்பந்த ரீதியிலான கட்டட தொழில் மின் இணைப்பு (Wiring) ஆகிய வணிகத்துறைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவில் கடன் பெற்றவர்களில் தையல், மின் இணைப்பு மற்றும் பிளம்பிங் (Wiring & Plumping), வணிகக் கட்டுமானம், அழுக்ககலை நிலையம், வாகனம் திருத்தும் நிலையம் (Garage), வளிசீராக்கி (A/C Repairing) ஆகிய வணிகத்துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விசேடகடன் திட்டமானது, இளம் தொழில் முனைவோரை வலுவூட்டும் நோக்குடன் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றின் ஒருங்கிணைப்போடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கடன் திட்டமானது, நாடளாவிய ரீதியில் வெவ்வேறு வணிகத் துறைகளில் ஈடுபட்டு வருகின்ற இளம் தொழில் முனைவோருக்கு கடன்களை வழங்கி வருகின்றது.

இலங்கை வங்கியானது, பிரதமர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகம்(PDO), தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் மத்திய நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவப் பிரிவு (CPMU), சிறிய முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவு (SEDD) என்பவற்றுடன்இணைந்து இளம் தொழில் முனைவோருக்கு நிதியுதவியை வழங்குவதற்காக "துறுணு திரிய" கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இலங்கை வங்கியின் "துறுணு திரிய"கடன் திட்டத்தின் கீழ், 3 வருடங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற பட்டதாரிகள் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க தொழில் சார் தகைமைகளைக்கொண்ட 40 வயதிற்குட்பட்ட தொழில் முனைவோருக்கு உத்தரவாதமற்ற மற்றும் பிணைகளற்ற/ இலகுபடுத்தப்பட்ட பிணை நிபந்தனைகளின் கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இக்கடன்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை நாடுதழுவிய ரீதியில் இலங்கை வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## யாழ்.மாநகர சபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபு 2019.11.07 ஆம் திகதியிலிருந்து பொதுமக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ். மாவட்ட செயலகம், யாழ். பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம், யாழ். மாநகர சபை, யாழ். பொது நூல் நிலையம், நவீன சந்தை, நாவலர் பொது மண்டபம் ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இவ்வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்குத் தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகள் எதிர்வரும் 2019.11.18 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகர சபை செயலகத்தில் சமர்ப்பிக்க முடியும் என ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்தார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சிறந்த தோழமை வேண்டுமானால் தானும் சிறந்த தோழனாக இருக்க வேண்டும். -பேடர் கோர்டோன்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் திருநெல்வேலி சந்தை பிரதேசம், திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம், இராமலிங்கம் ஆடிய பாதம் வீதி சந்தி, முகா மைத்துவபீடம், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2, 3, 4ஆம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரிய குளத்திலிருந்து முட்டாசுக் கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் 'லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்றெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்.புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறி நதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, றொப்பாஸ், பூதர்மடம், கோப்பாய், இருபாலை, வசந்தபுரம், கட்டைப்பிராய், இலங்க நாயகி, ஆடியபாதம் வீதி, நல்லூர், கல்வியங்காடு, கிளிகடை, நல்லூர்பின் வீதி, அல்வாய், மாலுசந்தி, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர் மடம், நாவலடி, லங்கா பாடசாலை, பருத்தித்துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, VM வீதி, தம்பசிட்டி, சாளம்பை, புனித நகர், மாதனை, கற்கோவளம், வெளிச்சவீடு, தும்பளை, வறாத்துப்பளை, திகிரி, கற்கோவளம் ஐஸ் தொழிற் சாலை, மந்திகை, வில்லூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத்தமிழ் வீதி, யாழ் கோட்டை, சுகாதார திணைக்களம், மீனாட்சி அம்மன் கோவிலடி, யாழ். சிறைச்சாலை, யாழ்.பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் ஒலுமடுவிலிருந்து ஒட்டுசுட்டான் வரை, ஒட்டுசுட்டானிலிருந்து மன்னன் கண்டல் வரை, ஒட்டு சுட்டானிலிருந்து முத்தையன் கட்டு வரை, ஒட்டுசுட்டானிலிருந்து நெடுங்கேணி வரை, நெடுங்கேணியிலிருந்து வெடிவைத்தகல் வரை, நெடுங்கேணியிலிருந்து பெரிய இத்திமடு வரை, நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் வரை, பழப்பதனிடும் தொழிற் சாலை, 642ஆவது இராணுவ படைப்பிரிவு முகாம், நெடுங்கேணி, பல நோக்கு கூட்டுறவு சங்க அரிசி ஆலை நெடுங்கேணி, ஞானகலா, 64ஆம் இராணுவ படைப்பிரிவு முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், உளுக்குளம், பெரிய காடு, பீடியாபாம், மெனிக்பாம், ஆண்டியபுளியங்குளம், கிறிஸ்தவகுளம், சக்திகம, முகத்தான்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்"

-பிராங்க் லோயிட் ரைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)

### அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## ஆறு வகை வணக்கங்கள்

ஷாஷ்டாங்கம் எனப்படும் ஆறு அங்க வணக்க முறையை யோகாசன சூரிய நமஸ்காரப் பயிற்சியின் போது கடைப்பிடிப்பார்கள். அடுத்தபடியான நான்காவது மற்றும் ஐந்தாவது வணக்கமான நமஸ்காரமும் அபிநந்தனமும்' தெய்வங்கள், மனிதர்கள் ஆகியோருக்கு உரித்தானவை. மனிதர்களைத் தவிர்த்து மற்றவராசிகளுக்கும் நமஸ்காரம் மூலமாக மரியாதை செலுத்தலாம்.

இரண்டு கைகளையும் ஒன்றாக இணைத்து கூப்பிக் கொள்ளும் போது, நீயும் நானும் சமமானவன் என்ற தத்துவம் தெரியப்படுத்தப்படுகின்றது. மேலும், கைகளைக் கூப்பி தலையை சாய்த்து மரியாதை செலுத்தும் போது ஒருவரின் பணிவுடைமை காட்டப்படுகின்றது.

இறுதியாக, கால்களைத் தொட்டு வணங்கும் முறை தெய்வங்கள், தாய், தந்தை, குரு மற்றும் சான்றோர்கள் ஆகியோருக்கு மட்டுமே உரித்தானவை. தெய்வங்களின் கால்களைத் தொட்டு வணங்குதல், இறைவனிடம் சரண்புகுதல் தத்துவத்தைக் குறிக்கின்றது. மற்றவர்களின் கால்களைத் தொட்டு வணங்குதலும் வெவ்வேறு தத்துவமுடையது.

ஒரு சின்ன உதாரணத்தைப் பார்ப்போம், போக வேண்டிய ஊருக்கு வழி தெரியாவிட்டால், வழி தெரிந்த ஒருவரின் கால் தடங்களைப் பின்பற்றி சென்றாலே போதும் நாமும் ஊரைச் சென்றடையலாம். அதுபோல வாழ்க்கையில் சிறந்தவர்களின் அறிவுரைகளையும், கருத்துகளையும், போதனைகளையும் நாம் பின்பற்றினால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம். இதுவே கால்களைத் தொட்டு வணங்கும் முறை உணர்த்தும் தத்துவமாகும்.

கண்டவர்கள் காலில் எல்லாம் விழுவது சரியல்ல. எல்லா வகையான மனிதர்களுக்கும் நமஸ்காரம் முறையில் மரியாதை தரவேண்டும். ஆனால் கால்களைத் தொட்டு வணங்கும் முறை தெய்வம், தாய், தந்தை, குரு மற்றும் சான்றோர் ஆகியோருக்கு மட்டுமே உரித்தானது. (முற்றும்)

# வலைப்பாடு ஜெகமீட்பர் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில ஜெகமீட்பர் அணி வெற்றி பெற்று அரையிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

ஜெகமீட்பர் அணி சார்பாக நீயூட்சன் 02, அலெக்ஸ், விச்சு ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக்கொடுத்தனர். (க)



இலங்கை அரசாங்க சேவை விளையாட்டுச் சங்கம் நடத்தும் அரச உத்தியோகத்தர்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் வட மாகாண ஆண்கள் ஆசிரியர் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. (க)

# டிலுக்சனின் வெற்றிக்கோல் கைகொடுக்க அரையிறுதிக்கு முன்னேறியது பாடும்மீன்



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து இரணைமாதா சென். மேரீஸ் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில பாடும்மீன் அணி வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. பாடும்மீன் கெயின்ஸ் அணி சார்பாக டிலுக்சன் பெற்றுக் கொடுத்தார். (க)

# அரையிறுதியில் நவஜீவன்ஸ்



மனோகரா உதைபந்தாட்ட தொடரில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கலைமதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக கஜன்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். நவஜீவன்ஸ் அணி சார்பாக விமலேஸ் ஒரு கோலைப் போட்டார். (க)

# அரையிறுதிக்குள் நுழைந்தது பாஷையூர் சென். அன்ரனீஸ்



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல் கணக்கில் அன்ரனீஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. அன்ரனீஸ் அணி சார்பாக கலிஸ்ரர், துசாரின், யஸ்லின் ஆகியோர் தலா ஒரு கோலையும் கலைமதி அணி சார்பாக அபிராம், விஸ்னுபிரியன் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# வவு.மாவட்ட உதைபந்தாட்ட வளர்ச்சி தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

## பிரதமர் ரணில் உறுதி



வவுனியா மாவட்டத்தில் உதைபந்தாட்ட பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான விளையாட்டு மைதானம் மற்றும் நவீன விளையாட்டு உபரணங்களை பெற்றுத் தருமாறு வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மகஜர் ஒன்றை யைளித்துள்ளது.

அண்மையில் வவுனியாவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வருகைதந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டயானகமகே வின் ஏற்பாட்டில் நகரில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் சந்தித்த உதைபந்தாட்ட சங்க செயலாளர் மு.சௌமியன் தலைமையிலான சங்க பிரதிநிதிகள் குறித்த மகஜரை கையளித்தனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வவுனியா மாவட்டத்தின் உதைபந்தாட்ட லீக்கில் 20 க்கும் மேற்பட்ட கால்பந்து விளையாட்டுக் கழகங்களை இணைத்து செயற்பட்டு வரும் நிலையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் விளையாட்டு மூலம் எமது கவனத்தை ஈர்ப்பதற்கு முயல்கின்றோம்.

இந்தச் சமுதாயத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வசதிகளை வழங்குவதற்கான சிறந்த வாய்ப்பாக விளையாட்டுத்துறை காணப்படுகின்றது.

எனவே நடைமுறையில் பயன்படுத்த புதிய உபகரணங்கள் இல்லாததால் வீரர்களுக்கு பயிற்சி அளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. அதே போல் வவுனியா மாவட்டம் முழுவதும் கால்பந்துக்கான குறிப்பிட்ட விளையாட்டு மைதானம் எங்களிடம் இல்லை.

எனவே புதிய உபகரணங்களுக்கும், விளையாட்டு மைதானத்திற்கும் ஒரு நல்ல தீர்வை வழங்கவும். தற்போது நாங்கள் பயிற்றுவிக்கும் நகரசபை மைதானத்தை புனரமைப்பு செய்து தரும்படி கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (க-250)

## விசேடமாக...

11.30 மணிக்கு விசேடமாக பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கூடிய பாராளு மன்ற அலுவல்கள் குறித்த குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய அன்றைய தினம் 'விளை யாட்டுக்கள் தொடர்பான தவறுகளைத் தடுத் தல்' சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள் ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கடற்றொழிலுக்கு...

வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக் களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 11ஆம் திகதி வரை வங்காள விரிகுடாவிற்கு கடற்றொழி லுக்கு செல்ல வேண்டாம் என வளிமண்டல வியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள் ளது.

இந்த சூறாவளி எதிர்வரும் 24 மணித் தியாலங்களில் அதிக வலுவான சூறாவளி யாக மாறி வடக்கு நோக்கி வடமேல் திசை யூடாக பங்களாதேஷ் கரையை அண்மிக்க வுள்ளது.

இதன் காரணமாக இந்த கடற்பிராந்தி யத்தில் மணித்தியாலத்திற்கு 110 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-3)

## சிறுபான்மையின...

யினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் போராட்டத்தின் போது கூட கேட்காத விடயங்களை தமிழ் அரசியல் கட்சிகள் கொண்டுவந்துள்ள 13 அம்சக் கோரிக்கைகள் மூலமாக முன்வைத் துள்ள நிலையில் தாம் வெற்றிபெற வேண் டும் என்ற காரணத்தினால் சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள சஜித் பிரேமதாஸ தமிழ்த் தரப்பின் கோரிக் கையை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

. பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் களிடம் தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ள 13 கோரிக்கைகள் தொடர்பில் அரசின் நிலைப் பாடு என்னவென்பது தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர்கள் இதனைக் கூறினர். (ம-3)

## அமைப்பாளர்...

லிருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்கவை நீக்க சுதந்திரக்கட்சி முடி வெடுத்துள்ளது. அவருக்கு பதிலாக பாராளு மன்ற உறுப்பினர் லசந்தா அழகிய வண்ணா நியமிக்கப்பட உள்ளார்.

லசந்தவின் நியமனம் தற்காலிகமானது என்றும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நிரந்தரமான தொகுதி அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என சு.கவின் பதில் தலை வர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித் துள்ளார். (ம-3)

## வவுனியா பேருந்...

பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து மூதூர் நோக்கி கஞ்சா கடத்துவதாக பொலிஸாருக்கு கிடை த்த ரகசிய தகவலின் அடிப்படையில் வவு னியா புதிய பேருந்து நிலையத்தில் சந்தேகத் திற்கிடமாக நின்ற மூதூர் பகுதியை சேர்ந்த 32 வயதுடையவரின் பயணப்பொதியினை சோதனையிட்ட சமயத்தில் சுமார் ஒரு கிலோ 850 கிராம் எடையுடைய கேரள கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன் றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-250, 299)

## புதிய அரசியல...

இதேவேளை அதிகார பேராசை கொண்ட சிறு குழுவுக்கு நாட்டைச் சீரழிக்க இனி ஒரு போதும் இடமளியேன் என்றும் சஜித் பிரேம தாஸ தெரிவித்தார்.

அத்தோடு பாராளுமன்ற வரையறைக் குள் மாத்திரமல்லாது மக்கள் ஆணையுடன் புதிய அரசியலமைப்பு நடவடிக்கைகள் பாராளுமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் முன்னெடுக்கப்படுவதற்கு பாடுபடுவேன்.

மக்களின் விருப்பம் இன்றி அதனை ஒரு போதும் நடைமுறைப்படுத்த மாட்டேன். மக்களின் ஆசீர்வாதத்துடன் புதிய நாட்டை கட்டியெழுப்ப முன்னோக்கிச் செல்ல இணை ந்து பயணிப்பதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுகின்றேன்" எனத் தெரிவித்தார். (ம-3)

## சஜித் ஆட்சியில்...

கொள்ளக்கூடிய அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

எனவே சஜித் பிரேமதாஸவை எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறச் செய்ய அன்னம் சின் னத்திற்கு வாக்களிக்குமாறும் இரா.சம்பந் தன் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை சுயேட்சையாக கள மிறங்கியுள்ள சிறுபான்மை ஜனாதிபதி வேட்பாளர்களின் போட்டி என்பது ஒரு போதும் தமிழர்களுக்குச் சாதகமாக அமை யாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களுக்கு வாக்களிப்பதனால் பாதக மான விளைவுகள் ஏற்படலாம். எனவே அப் படியான வேட்பாளர்களை தமிழ், முஸ்லிம் மக்கள் நிராகரிக்க வேண்டும் என்றும் இரா.சம்பந்தன் கேட்டுக் கொண்டார். (ம-3)

## பாராளுமன்றில்...

க்கு விசேட உரையாற்றியபோதே அவர் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டவுடன் ஊழல் மோசடிகாரர்களுக்கும், போதைப்பொருள் விற்பனையாளர்களுக் கும் மத அடிப்படைவாதிகளுக்கும் எவ்வித மன்னிப்பும் இன்றி சட்டத்தை நடைமுறைப் படுத்துவேன்.

நாட்டிலுள்ள அரசியல்வாதிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுத் தல் மற்றும் பாதுகாப்பு வழங்கும் பிரபுக்கள் அரசியல் முறைமையை முழுமையாக இல்லாதொழிப்பேன் என்று உறுதியளிக்கி றேன் என்றார். (ம-3)

## அனைவரையும்...

நாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரி வித்த அவர், பொதுமக்களைப் பாதுகாக்கும் திறன் கொண்ட அரசாங்கமே நாட்டுக்கு தேவை என கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஒரு புதிய நிர்வாகத்தையும் புதிய ஆட்சியாள ரையும் தேர்ந்தெடுக்க பொதுமக்கள் விரும் பினால், உங்களுக்கு ஒரே ஒரு தேர்வுதான். அது தேசிய மக்கள் சக்தியாகும்.

ஒரு நாட்டில் குழந்தைகள், இளைஞர் கள், முதியவர்கள் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இவர்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை யாகும்.

எனவே அனை வரும் ஒன்றி ணை ந்து சமூகத்தின் அனைத்துப் பிரிவு களிலிருந்தும் மக் களைப் பாதுகாக் கும் திறன் கொண்ட புதிய அரசாங் கத்தை தெரிவு செய்ய வேண்டும்.

மேலும் மிலே னியம் சவால்கள் நிறுவனத்துடனான ஒப்பந்தம் குறித்து இரு தரப்பினரும் தற்போது பேசி வரு கின்றனர். அந்த ஒப் பந்தம் மகிந்த தரப் பினர் கூறுவதைப் போல தீங்கானது அல்ல" என்றும் கூறினார். (ம-3)

## சம...

வெளிநாடுகள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளிடம் 13 பிளஸ் வழங்குவ தாக நான் கூற வில்லை. மகிந்த ராஜபக்ஷவே கூறி னார்.

ஒற்றையாட்சி, நாட்டின் ஒருமைப் பாடு, இறையாண்மை ஆகியவற்றை பாது காத்துச் செல்லும் வகையிலேயே எனது பயணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நான் நாட்டு மக்களுக்கு முன்னால் மாத் திரமே மண்டியிடுவேன். வேறு அழுத்தங் களுக்கு அடிபணியும் நபர் நான் அல்ல. எனக்கு எவரும் நிபந்தனை விதிக்க முடி யாது எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட் டுள்ளார். (ம-3)

## 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய்வேன்

### அநுர வாக்குறுதி



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க நேற்று முற்பகல் இலங்கை வணிக சபையின் பிரதி நிதிகள் சிலருடன் கலந்துரையாடினார்.

இலங்கை வணிக சபையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அநுரகுமார திசா நாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள சில விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, ரணில் விக்கிரமசிங்கவின் அதிகார நோக்கமும் ஜனாதிபதி மைத்திரி பால வின் அதிகார நோக்கமும் 19ஆம் திருத்தத் தில் உள்ளடங்கியுள்ளது. 19ஆவது திருத் தத்துடன் நாட்டை முன்நகர்த்த முடியாது.

இந்த இரண்டில் ஒன்றை நாம் பின்பற்ற வேண்டும். ஒன்று நாம் முன்னர் இருந்த இடத் தில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் முழுமையாக பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டும். எமது யோசனைத் திட்டம் பாராளுமன்றத்தை கேந்திரமாகக் கொண்ட ஆட்சி முறைமையாகும். நான் ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்டால் பெரும் பான்மை உறுப்பினர்களை இணைத்துக் கொள்ள முடியும் என நம்புகிறோம்.

நாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி கதிரையில் அமர்ந்தால் அவர்கள் அனை வரும் அதனை இரத்து செய்வதற்காக கைகளை உயர்த்துவார்கள் என அநுர குமார திசாநாயக்க குறிப்பிட்டார். (ம-3)

## இலங்கை அரசு...

யிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதற்கமைய வெளியிடப்பட்டுள்ள அறிக் கையில், 'அங்கீகாரம் அளிக்கும் அமைச்சர வையின் தீர்மானத்தை அமெரிக்கா வர வேற்கிறது.

இந்த ஐந்து வருட நிதியுதவி ஒப்பந்தத் தின் அமுலாக்கம் முழுவதும் நிதியுதவி அளிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் இலங்கையே மேற்பார்வை மற்றும் முகா மைத்துவம்' செய்யும்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண் டிருக்கும் நிலையில், இந்த நிதியுதவி கைச் சாத்திடல் மற்றும் பாராளுமன்ற அங்கீகாரம் தொடர்பாக 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதிக்கு பின்னர் இலங்கை அரசாங்கத்துடன் பணியாற்றுவதற்கு அமெ ரிக்கா எதிர்பார்க்கிறது' எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. (ம-3)

## கோத்தாவின்...

பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வின் வெற்றியை உறுதிப்படுத்தும் தேசிய காங்கிரஸின் பொதுக் கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் ஆதரவாளர்களினால் தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு, மேடையை நோக்கி கற்களும் வீசப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரி விக்கின்றன. (ம-3)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1568 திகதி 2019/11/07
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 36 43 56 71

மஹஜன சம்பத
திகதி 2019/11/07
சீட்டிழுப்பு இலக்கம் 4044
L 4 9 9 3 7 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2294
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 46 52 54 57

நீரோகா
திகதி 2019/11/07
சீட்டிழுப்பு இலக்கம் 0621
கன்னி 02 17 46 50

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1071
சீட்டிழுப்பு திகதி 07.11.2019 வியாழக்
A 07 23 60 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,000,512

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1619 சீட்டிழுப்பு திகதி 07/11/2019
வெற்றி இலக்கங்கள் 06 10 28 65 P
ரூ. 40,597,524

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 785
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.11.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,141,630/-
வெற்றி இலக்கங்கள் 02 03 08 33 P

ராசி
திகதி 07/11/2019 வெற்றி வாரம் 2671 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 29 31 33 53
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,619,974
Web: www.dlb.lk

# தொழிற் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

(கொழும்பு)

நாட்டில் உள்ள இளைஞர்களின் தொழில் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டில் தகவல் தொழில்நுட்ப புரட்சி ஒன்று ஏற்படுத்தப்படும். அதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளன. சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தொழில் பேட்டைகள் அமைக்கப்படும். அதன் ஊடாக இளைஞர்களின் தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படும். இதற்கு பணம் எப்படி கிடைக்கும் என்று எதிர்த்தரப்பினர் கேட்கின்றனர்.பணம் போதிய அளவு இருக்கிறது என்று சஜித் பிரேதமாச கூறினார். (ம-3)

# தேர்தலில் சஜித்துக்கு ஆதரவு

## ஜனநாயக போராளிகள் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக போராளிகள் கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

நேற்று ஜனநாயக போராளிகள் கட்சியினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது உறவுகளே தெற்காசிய பிராந்திய நலன் சார்ந்து ஒரு விடுதலைப் போராட்டம் பயங்கரவாத முலாம் பூசி இலங்கை தீவின் குடிகளான் தமிழினத்தின் மீது மாபெரும் அழிவுகளை ஏற்படுத்தி முடித்து வைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரான கடந்த பத்து ஆண்டுகளில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் அனுகூலத்தினை தமிழினம் பயன்படுத்தி கொள்ள வேண்டிய ஒரு அவசியமான தேர்தலாகவே இதனை நாம் கருதுகிறோம்.

தமிழர்களது வாக்குகளே இது வரையில் ஜனாதிபதியை தீமானிக்கும் ஆதிக்கசக்தியாக இருந்து வந்துள்ளது. அது வாக்களிப்பின் ஊடாகவும் வாக்களிப்பை தவிர்ப்பதன் ஊடாகவும் இடம்பெற்றுள்ளது.

அவ்வகையில் பல வேட்பாளர்கள் இத்தேர்தல் களத்திற்கு வந்திருந்தாலும் இரு வேட்பாளர்களுக்கிடையிலேயே போட்டிகள் உச்சம் பெறுகிறது.

சர்வதேச மற்றும் பிராந்திய அரசுகளுடன் இசைந்து செல்லதக்க சட்டத்தின் ஆட்சியனை மதித்து நிலைநிறுத்தக்கூடிய குறிப்பாக குடும்ப ஆட்சி முறைக்கு முற்றுபுள்ளி வைத்து செயலாற்றகூடியவராக நாங்கள் சஜித்பிரேமதாசாவை என்று ஆதரிக்கின்றோம். (ம-3,299)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு...

இரா.சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஜனநாயக ரீதியாக ஜனாதிபதியொருவரை தெரிவு செய்தற்கான தேர்தல் 2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பாராளுமன்றத்தில் மூன்றாவது அதிகூடிய எண்ணிக்கையிலான ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழரசுக் கட்சி சொல்லப்பட்ட தேர்தல் தொடர்பாக தனது நிலைப்பாட்டைக் குறிப்பிட விரும்புகிறது.

பொதுஜன பெரமுன மற்றும் அதன் அபேட்சகர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவர்களோடு ஆட்சீயதிகாரத்திலிருந்த ஏனையவர்கள் ஆகியோரின் கடந்த காலச் செயற்பாடுகள் கவலையளிப்பவையாகும். அரசிய்லமைப்பிற்கான 17வது திருத்தத்தை நீக்கியமை, அரசியலமைப்பிற்கான 18வது திருத்தத்தை நிறைவேற்றியமை, அந்நோக்கத்திற்காக சட்டவாக்கச் சபையை (பாராளுமன்றத்தை) ஆட்டிப்படைத்தமை, அரசியலமைப்புப் பேரவையை இல்லாதொழித்தமை, சேவைத்துறைகள் மற்றும் நீதித் துறை ஆகியவற்றிற்கான அனைத்து உயர் நியமனங்களும் முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதியின் விருப்பத்திற்கமைய மேற்கொள்ளப்பட்டமை ஆகியன ஆட்சி முறையின் அனைத்து அம்சங்களையும் முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதியான ஒரு தனி மனிதரின் எதேச்சாதிகரமானதும் தான் தோன்றித்தனமானதுமான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தன. பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப் பிரேரணை மற்றும் அற்ப குற்றச்சாட்டுகளின் பேரில் முன்னாள் இராணுவத் தளபதிக்கெதிராக வழக்குத் தொடுத்தமை ஆகியன அந்த ஆட்சியின் எதேச்சாதிகார மற்றும் தான்தோன்றித்தனமான தன்மையை உறுதிப்படுத்தின.

அப்போதைய ஜனாதிபதி எத்தனை தடவையும் பதவியில் தொடர்ந்து இருப்பதற்கு உதவும் வண்ணம் அரசியலமைப்பு திருத்தியமைக்கப்பட்டது. இது, சர்வாதிகார ஆட்சியைத் தொடர்வதற்கான திடசங்கற்பத்தை எடுத்துக் காட்டியது.

இயங்கிக் கொண்டிருந்த அரசாங்கத்தைப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையொன்று இல்லாது, அரசியலமைப்பிற்கு முரணான ஓர் அரசாங்கத்தின் வாயிலாக 2018 ஒக்டோபரில் கடத்தியமை பதவி வழங்குவதான வாக்குறுதி, இலஞ்சம் மற்றும் வேறு சலுகைகள் மூலம் தூண்டப்பட்ட கட்சி மாறல் வாயிலாக பாராளுமன்றத்தில் ஒரு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் ஆகியன அதிகாரத்திற்கான அளவற்ற ஆசையை எடுத்துக் காட்டுவனவாக இருந்தன.

பத்திரிகையாளர்கள், சிவிலியன் குடிமக்கள், மாணவர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் என்.ரவிராஜ் ஆகிய எமது இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் படுகொலைகளும் காணாமற்போதலும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் மோசமாக மீறப்பட்டமையை எடுத்துக் காட்டுகின்றன. வெள்ளை வான் பீதி நன்கு நினைவிலுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட முழுமையான ஒத்துழைப்பு இருந்தும், ராஜபக்ஷ அரசாங்கம் தேசிய பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டு, மக்கள் முரண்பாட்டையும் ஒற்றுமையின்மையையும் தவிர்த்து ஓர் ஐக்கிய, பிரிபடாத, பிரிக்கமுடியாத நாட்டில் வாழ்வதற்கு உதவக்கூடியதாக அனைத்து மக்கள் மத்தியிலும் ஒற்றுமையை ஊக்குவிக்கத் தவறியது. ஆட்சி அதிகாரங்களைப் பகிர்வதற்கான தற்போதுள்ள ஏற்பாடுகளை வலுவற்றதாக்குவதற்கும் குறைப்பதற்கும் அரசாங்கம் மேலும் முயற்சித்தது. ஆட்சி அதிகாரங்களைப் பகிர்வதை அரசியலமைப்பு ரீதியாக மேம்படுத்துவதற்கும் அதனை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதற்கும் உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்திலுள்ள பல அமைப்புகளுக்கும் அது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் தவறியது.

மற்ற முக்கிய அபேட்சகரான சஜித் பிரேமதாசவினதும் அவர் சார்ந்த அரசியல் இயக்கத்தினதும் செயலாற்றுகை அத்தகைய முறைப்பாட்டிற்கு இடம் வைக்கவில்லை. மாறாக, அவர்கள் அந்நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

ஓர் ஐக்கிய, பிரிபடாத, பிரிக்கமுடியாத நாட்டினுள் தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் அரசியல் தீர்வைக் காணும் விடயம், காணாமற் போன ஆட்களின் விடயம், தடுப்புக் காவலில் உள்ள ஆட்களின் விடயம், காணி விடுவிப்பு, மீள்குடியேற்றமும் புனர்வாழ்வும், உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அமுல்படுத்தல் ஆகியன நிறைவேற்றப்பட வேண்டும் புதிதாக தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி இவ்விடயங்களுக்கு அவசரமாக தீர்வு காணவேண்டும். தமிழ் மக்களின் நலன்களுக்காக மாத்திரமின்றி, முழு நாட்டினதும் அனைத்து மக்களினதும் நலனுக்காகவும் இவ்விடயங்களுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இவ்விரு வேட்பாளர் களினதும் முன்னைய செயற்பாடுகளுடன்சேர்த்துப்பார்க் கப்படும் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனங்கள் பற்றிய ஒரு பரிசீலனையானது, புதிய ஜனநாயக முன்னணியின் சஜித் பிரேமதாசவின் வேட்பிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் கொள்கைகளிலும் நம்பிக்கை வைப்பது தான் சரியான செயலாக அமையும்என்பதை எடுத்துக்காட்டும்.

பொருளாதார விடயங்கள் தொடர்பாக, இரு வேட்பாளர்களும் மிகவும் விரிவான வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர் எந்த அளவிற்கு அவை நிறைவேற்றப்படும் என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியதாகும். ஊழல் என்பது இரு வேட்பாளர்களது அரசாங்கங்களுக்கு எதிராகவும் முன்வைக்கப்படும் ஒரு குற்றச் சாட்டாகும். இலங்கை இருப்பு கொள்ள வேண்டுமாயின், ஊழல் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

இவ்வனைத்துக் காரணிகளையும் கவனத்தில் கொண்டு, குறிப்பாக முக்கிய முனைகளில் அவர்களது முன்னைய செயற்பாடுகளையும் அவரவர் தேர்தல் விஞ்ஞாபனங்களின் அடிப்படையிலான எதிர்காலச் செயற்பாடுகளையும் கவனத்தில் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு (த.தே.கூ) - இலங்கைத் தமிழரசுக் கட்சி அனைத்து மக்களை யும், குறிப்பாக தான் பிரதிநிதித் துவப் படுத் தும் தமிழ் மக்களை அன்னச் சின்னத்தில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு வாக்களிக்கு மாறு கேட்டுக் கொள்கிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள் ளது. (ம-3)


## கடை வாடகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 993 8348 (C-8163)

## விற்பனைக்கு

ஒருநாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 212 2154 (277)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS (C-8115)

150க்கும் மேற்பட்டவர்களுக்கு உள்நாட்டு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு விசா வழங்கி சாதனை படைத்த

SIKARAM ACADEMY இன் 10வது ஆண்டு நிறைவையொட்டி 3 - 6 மாதத்தில்



Switzerland
New Zealand
Australia
Canada

கருத்தரங்கும் நவ.16 சனிக்கிழமை பதிவுகளும்

Student Visa Work Visa - மற்றும் German உல்லாசப் பயணக்கப்பல் வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடனான

Tourism & Hospitality Management ஹொட்டேல் கற்கைநெறி with — TVEC & UK Certified

3ஏ மாதத்தில் ஆங்கிலத்தில் சரளமாக பேச FREE ENGLISH அடிப்படையிலிருந்து IELTS வரையில்

SIKARAM ACADEMY — Business · Hospitality · English — FAST TRACK to CAREERS — Sri Lankan Entrepreneur of the Year 2017

021 221 9 221, 077 3616 798 — SIKARAM ACADEMY

221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். (C-8164)

## CCTV Technician Course

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



Approved Certificate
வேலைவாய்ப்பு உத்தரவாதம்
28th Batch : 10-NOV-2019 (C-8157)

Mobile Phone Repairing Course
01.12.2019 முதல் ஆரம்பம்

ICS EDUCATION — 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள்கோவில் அருகாமையில்) 021-7306000, 076-7013060

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8109)

## கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின் — வர்த்தக கையியக்க மெசின் — வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின் (8716)

தொடர்புகளுக்கு : 076 796 6000, 077 968 1118 (இலங்கை)
இல் 4164336006
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொரன்ரோ, கனடா)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.